குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ ஆண்டு பங்குனித்திங்கள் 10—4—67 [இதழ் 5

ஸ்ரீ காசி குமாரசுவாமி மடாலயத்தில் (30—3—1967)



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளுக்குப்
பொன்னாடை போர்த்தி ஆசியருளல்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

என்றுஞ் சிவத்தோ
டிணைபிரியா தேயறிவாய்
நின்றபடி தன்னை
நிகழ்த்தினன் — மன்றில்
நடமாடும் ஆரூரன்
ஞானப்ர காசன்
திடமாக என்னுள்ளத்
தில். (51)

ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 || 10–4–67 || இதழ் 5

உட்பொருள்

எண்		பக்கம்
1	வந்தது புத்தாண்டே!	249
2	புதிய ஆண்டில்	... 251
3	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	... 254
4	சித்தாந்த வினவிடை	... 261
5	‘அமுதிற்குத் தமிழென்று பேர்’	... 267
6	அப்பர் அருள் முரசு	... 272
7	திருத்தொண்டர் வரலாறு	... 277
8	கிருத்திகா நட்சத்திர அபிஷேக விபரம்	... 280
9	ஸ்ரீ வனதுர்கா மகிமை	... 281
10	நவசத்திகளின் வழிபாடு	284
11	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காசி யாத்திரை	287
12	வேலூர் இலவச சித்த வைத்தியசாலை	... 292
13	தையல்நாயகி அந்தாதி	297
14	செய்திகள்	... 300
15	எதிர்காலம்	... 301
16	Extract from the Visitor's Book	260, 291

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ - பங்குனி - 10—4—67 [இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

புதிய ஆண்டில்

மனிதன் நினைவுகளால் வாழ்கின்றுன் என்றுரைத்தால் பொருந்தும், அந்நினைவுகளில் நல்லன அவனை உயர்த்துகின்றன; தீயன அவனைத் தாழ்நிலைக்கு அழுத்துகின்றன. தாழ்நிலைக்கு அழுத்தப்படாமல் அவன் தப்ப நினைத்தால், நல்ல நினைவுகளால் அவன் உயரவேண்டும். நினைவுகள் நெறிமாருமல் இருக்க நல்ல தியானம் வேண்டும். தியானம் ஒன்றுலேயே உள்ளத்தைத் திருத்த முடியும் எங்கெங்கோ ஓடிக்களைக்கின்ற நிலைமாறி, நிலையான இன்புமுடைய பரம்பொருளோடு நெஞ்சைத் தொடர்பு படுத்துவதே

வந்தது புத்தாண்டே!

—: வேலன் :—

வந்தது வேனில்! வந்தது தென்றல்
வந்தது புத்தாண்டே!
தந்தது இன்பம்! தந்தது அமைதி!
தமிழகம் எங்கணுமே! (1)

துன்பம் தவிர்ந்தது! தூய்மை செழித்தது!
துலங்கிடும் எங்கணுமே!
இன்பம் தழைத்தது! ஏற்றம் விளைந்தது!
இணைந்தது யாவினுமே! (2)

ஏற்றினம் நென்சினில் அன்பெனும் விளக்கை;
எழுந்தது சுடரொளியே!
போற்றினம் அன்னை தாமரை யடிகள்
புவியிசை ஓங்குகென்றே! (3)

மெய்ம்மைச் சுடரினில் மேதினி ஓங்கிட
மிளிர்ந்திட வையமெலாம்!
பொய்ம்மைப் பிசாசினைப் புறங்கண் டெங்கணும்
பொங்குக புத்தறமே! (4)

கவலை யிருட்டினில் கால்வைத்த போதினில்
கருணைச் சுடர்வரவே
சவலைக் குழந்தையர் தாய்கண்ட வாறெனத்
தாவிக் குதித்தனமே, (5)

'உண்மை இறை'யென உத்தமர் கூறிடும்
உண்மை தெளிந்தனமே;
திண்மை இறைநிலை யாமென்ற வேதத்
தெளிவில் தளிர்த்தனமே. (6)

போயின இன்னல்கள் ; போயின மாயங்கள் ;
    பூத்தது புத்தாண்டே !
ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாகியும்
    அன்னை புதியவளாம் ! (7)

காலச் சுழற்சியில் கருணைப் பிழம்பவள்
    காட்டும் புதுவிளக்காய்,
கோலம் பொலிந்திட ஆண்டு பிறந்தது ;
    கூடிப் பரவுவமே ! (8)

ஆழி தனிச்சுடர் ஆதவன் தண்ணொளி
    அன்பிற் றழுவியதும்
தோழி யெதைக்கை காட்டி மலர்ந்திடும்
    தாயநற் றாமரைபோல். (9)

நெஞ்சம் மலர்ந்தது ! நேர்மை செழித்தது !
    நீள்புகழ் பாடுவமே !
கொஞ்சம்இல் லைபுகழ் ; அன்னை பராசக்தி
    கோதில் பதம் தாழ்வமே ! (10)

உயர்ந்த தியானத்தின் பலன் எனலாம். இந்தத் தியான பலத்தின்முன் வேறு எந்த பலமும் நிற்கமாட்டா. இதனு லேயே தவத்தால் உயர்ந்த சான்றோர்கள் ஒறுக்கவும் அருள வும ஆகிய இரு பேராற்றல்களும் உடையவராந்தன்மையை உலகிற் காணகின்றோம்.

" ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும் "

என்பது திருவள்ளுவர் திருவாக்கு. இந்த அருளியல் மாந்தரையே திருவள்ளுவர், " நிறைமொழிமாந்தர் " என்று கூறுகின்றார். 'வெகுண்டு கூறினும் உவந்து கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும்மொழியே நிறைமொழி' என்று பரிமேலழகர் விளக்குதலும் இங்கு நினைக்கத்தக்கது,

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப "

என்பர் தொல்காப்பியர். திருக்குறளும் இந்நூற்பாவை அடியொற்றியே,

" நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் "

என்றுரைக்கின்றது.

இத்தகைய உயர்ந்த தியானபலத்தை எடுத்துப் போற்றாத தோத்திர சாத்திரங்கள் இல்லையென்றே கூறலாம். இதனை நாடு மறவாது போற்றும் கடப்பாடுடையது.

சமுதாயம் கடவுள் உணர்வை மறவாது போற்றி வருதல் வேண்டும். அவ்வுணர்வே சமுதாயத்தைத் தீய சக்திகளினின்றும் காப்பதாகும். இத் தெய்வீக மாத இதழ் இந்நற்பணியையே நாளும் புரிந்து வருகின்றது. உயர்ந்த அநுபவ ஞானியர்களது மெய்ம்மொழி விளக்கங்களைக் கட்டுரைகளாக ஆக்கித் தொடர்ந்து வெளியிட்டு வருகின் றது. பராபவ ஆண்டு முடிந்து பிலவங்க ஆண்டு தொடங் கும் இந்த நேரத்தும் தன் அன்பர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றது " ஞானசம்பந்தம்".

பிறக்கும் புதிய ஆண்டில், இன்பம் பெருகுக; துன்பங்கள் நீங்குக; என்று வாழ்த்துகின்றது. இந்த நல்ல வேளையில், தியானபலமே அனைத்திலும் சிறந்த ஆதமபலம் என்ற கருத்தை அனைபுலகிற்குக் காணிக்கை ஆக்குவதில் கழிபேருவகை அடைகின்றது.

திருஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர்களும், மெய்கண்டார் முதலிய சந்தானசாரியார்களும் தந்த தோத்திர சாத்திரங்களின் சாரமும் இதுவேயாகும். இவ்வாறு தியானிப்போர் உள்ளத்தையே

'நெஞ்சப் புண்டரிகம்'

என்று திருமுறை உரைக்கின்றது;

'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்'

'வைத்தாய் மனத்து உன்னை'

'இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான்'

என்ற ஆசிரியப் பெருமக்கள் அருள்வாக்குகள் இங்கு உளங்கொளத்தக்க உயர்வுடையவையாகும். இவ்வாறு செய்யும் ஒருமைப்பாட்டுச் சிந்தனையாளர் என்னென்ன பலன்கள் அடையலாம் என்று திருமுறைகளே கூறுகின்றன. 'நம் வினைத் துன்பங்கள் நம்மைவிட்டு நீங்கும்; உள்ளக் கோணல் ஒழியும்; வீட்டுலக இன்பத்தை நாம் அடையலாம்'.

"பெருக லாம் தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம் பரமாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்திவணங்கவே"

வரும் புதிய ஆண்டில், 'தியானநெறி' நிற்கும் திரு உலகெங்கும் பரவி எல்லா நலங்களும் எய்தி உலகெலாம் வாழவேண்டும் என்று மீண்டும் வாழ்த்துகின்றது "ஞான சம்பந்தம்"

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

எல்லாம் சிவமயம்

பண்ணேன், உனக்கான பூசைஒரு வடிவிலே;
பாவித் திறைஞ்சஆங்கே
பார்க்கின்ற மலருடும் நீயே இருத்திஅப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன்; அலாமல்இரு கைதான் குவிக்கஎனில்
நாணும்என் உளம்நிற்றிநீ;
நான்கும் பிடும்போது அரைக்கும்பி டாதலால்
நான்பூசை செய்யல்முறையோ!
விண்ணே! விண்ணிதியாம் பூதமே! நாதமே!
வேதமே! வேதாந்தமே!
மேதக்க கேள்வியே! கேள்வியாம் பூமிக்குள்
வித்தே! அவ் வித்தின்முளையே!
கண்ணே! கருத்தே! என் எண்ணே! எழுத்தே!
கதிக்கான மோனவடிவே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

—தாயுமானவர்.

இறைவனை அடைதற்குரிய வழி, 'விதி மார்க்கம், பக்தி மார்க்கம்' என இரண்டாகக் கூறப்படும். விதிமார்க்கம் என்பது, வேத சிவாகமம் முதலிய நூல்களில் சொல்லப்பட்ட

விதி முறைப்படியே தங்கள் தங்களுக்கு இயன்ற வகையில் இறைவனை வழிபடுதல். 'பக்தி மார்க்கம்' என்பது, வேதம், சிவாகமம் முதலிய நூல்களைக் கேட்டற்கு வாய்ப்பில்லாமலே இறைவனிடத்து அன்பு தோன்ற, அவ்வன்பே காரணமாகத் தமக்கு இயன்ற முறையில் இறைவனை வழிபடுதல்; அறுபத்து மூன்று நாயன்மார்களில் பலர் இப்பக்தி மார்க்கத்தில் நின்றவரே யாவர்.

சிலர், 'பக்தி மார்க்கம், ஞானமார்க்கத்தை அடையச் செய்யும்; பின்னர் ஞானமார்க்கமே மோட்சத்தைக் கொடுக்கும்' என்பர். சைவ சமயம் அங்ஙனம் கூறுவதில்லை. ஞான மார்க்கம் பக்தி மார்க்கம்' என்னும் இரண்டும் இரண்டு தனி மார்க்கங்களே. 'பத்தி' என்பதும் ஞானத்தின் மற்றொரு வடிவமேயன்றி வேறன்று. அதனால், 'எந்த மார்க்கத்தில் நிற்பினும் அடையப்படும் பயன் ஒன்றே' என்றுதான் கூறும். இன்னும், பக்தியின் பயன் ஞானம் என்னாது, 'ஞானத்தின் பயனே பக்தி' என்று சைவ சமயம் கூறும்.

'ஒருவனுக்கு அவன் அறிந்த பொருளில் அன்றி, அறியாத பொருளில் இச்சை உண்டாகாது'. என்பது அனைவரும் அறிந்தது. ஆகவே, 'அறிவின் பயன் இச்சையேயன்றி, இச்சையின் பயன் அறிவன்று' என்பது வெளிப்படை. அறிவு தான் ஞானம்; இச்சைதான் அன்பு அல்லது பக்தி, இதனால், 'ஞானத்தின் பயனே பக்தி' என்பதன் பொருத்தம் நன்கு தெளிவாகும். எனவே, ஞானம் எவ்வளவுக்கு எவ்வளவு மிகுதியாகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு பக்தியும் மிகுதி யாகும் என்பது விளங்குகின்றது.

அறிதல் பலவகையாதலின், அவ்வறிவின் பயனாகிய அன்பும் பலவகைப்படுகின்றது. சைவ சமயத்தில் சொல்லப்படுகின்ற 'தாச மார்க்கம் சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம்' எனப்படுகின்ற, 'சரியை, கிரியை, யோகம், ஞானம், என்ற நான்கு நெறிகளும் வேறு வேறு நெறிகள்போலக் கூறப்பட்டாலும், உண்மையில் நான்கும் ஞான நெறிகளே, அஃதாவது, சரியை முதலிய மூன்றும் ஞானத்தின் வளர்ச்சி நிலைகளே. இதனைத் தாயுமான அடிகள் மிகத்தெளிவாக விளக்குகின்றார்.

" விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே "

என்பது அப்பாடல். இதில், 'சரியை முதலிய நான்குமே மெய்ஞ்ஞானம்' என்று கூறியிருத்தல் சிறப்பாக நோக்கத் தக்கது. 'அரும்பு, மலர், காய், கனி' என்ற உபமானம், 'அரும்புதான் மலராகி, மலர் காயாகிக் கனி உண்டாவதுபோல சரியைதான் கிரியையாகி, கிரியை யோகமாகிப் பின் ஞானம் விளைகின்றது' என்று விளக்கும் வகையில், சரியை முதலிய மூன்றும், ஞானத்தின் படிநிலைகளேயன்றி வேறில்லை என்பதை நிறுவுகின்றது.

'அன்பில்லாத வழிபாடு வழிபாடன்று' என்பது நன்கறிந்தது. சரியையாவது இது எனவும், அதனைச் செய்யவேண்டிய முறை இது எனவும், அதனைச் செய்பவர் அடையும் பயன் இது எனவும் அறிதல், ஞானம். அங்ஙனம் அறிந்தவாறே செய்ய விரும்பிக் கருத்துடன் செய்வதே பக்தி. இவ்வாறே மற்றைய கிரியை யோகங்களும் நிகழும். ஆகவே, ஞானமும் பக்தியும் இன்றி எதுவும் இல்லை. இருப்பினும், 'பக்தி மார்க்கம்' என்று ஒன்றைத் தனியாகக் கூறுவது, நூல்களின் வழியன்றி, பக்தி மாத்திரத்தால் செய்தல் பற்றியேயாம்.

'ஞானத்தின் பயன் பக்தி' என்பதனால், பக்தி மிகுந்து காணப்படும் இடத்தில் ஞானம் மிகுந்துள்ளது என்பதுதான் முடிவேயன்றி, ஞானம் இல்லாமல் பக்தி உண்டாய்விட்டது என்று கருதுவதற்கே இடம் இல்லை. " **கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்** " என்ற மாணிக்கவாசகர் திருவாக்கின் படி, பக்தியின் எல்லைக்கு ஓர் எடுத்துக்காட்டு கண்ணப்ப நாயனர் என்பது யாவரும் அறிந்தது. அவர் நூல்களைக் கல்லாமையால், அவருக்கு ஞானம் இல்லை என்று சொல்லுதல் சிறிதும் பொருந்தாது. கல்வி என்பது யாது என்று ஆராய்ந்து பார்த்தால், இது நன்கு விளங்கும்.

" கற்றதனல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் "

என்று திருவள்ளுவரும்,

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில் :-

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
வழிபாட்டிற்கு எழுந்தருளியபோது
புதுவை மாநிலக் கவர்னர், கனம். சீலம் அவர்களும்,
முதலமைச்சர், திரு. வேங்கடசுப்பா ரெட்டியார் அவர்களும்,
நிதி, அறநிலைய அமைச்சர், திரு. காங்கேயன் அவர்களும் உடன் செல்லுதல்

வேலூர் தேவஸ்தானத்தில்



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியை
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
வழிபடுதல்

" உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவுஎன்றே
கொள்ளும் உணர்வு "

என்று சேக்கிழாரும் அருளியவாற்றால், 'சிவனினும் இனிய பொருள் வேறில்லை' என்னும் ஞானத்தைத் தரும் கல்வியே கல்வி என்பதும், ஏனைய கல்விகள் எல்லாம் வெறும் ஆடம்பரக் கல்விகளே என்பதும் புலனாகும். கண்ணப்ப நாயனார், இத்தகைய கல்வியை முன்பிறப்பிலே கற்று அதன் பயனாகிய ஞானத்தையும் முன்பிறப்பிலே அடைந்துவிட்டமையால், வேடர் குலத்தில் பிறந்தும், அந்த ஞானத்தின் பயனாகிய எல்லையில்லாத பெரும்பக்தியை எளிதில் அடைந்துவிட்டார். இதனைச் சேக்கிழார்,

' முன்புசெய் தவத்தின் ஈட்டம்
முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட "

என்று குறித்தருளுகின்றார். பதினொன்றாந் திருமுறையிற் பொய்யடிமையில்லாத புலவர்கள் இவரை, 'கண்ணப்பர்' என்று கூடச் சொல்லாமல், 'திருக்கண்ணப்ப தேவர்' என்று குறிப்பிடுகின்றார்கள். கல்வி என்னும் பல்கடலையும் கடந்து, 'கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்' என்று கூறிய மாணிக்கவாசகர், கண்ணப்பர் தகுதியை நோக்கத் தம் தகுதி எவ்வளவு தாழ்வுடையது என்று கூறுவதையும், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் இரண்டையும் பெற்று ஞானத்தின் திருவுருவாய்த் திகழ்ந்த ஞானசம்பந்தர், கண்ணப்பரது பாதத்தின்மேல் வீழ்ந்து பணிந்து பேரின்பம் அடைந்தார் என்பதையும் நோக்குவோமேயானால், கண்ணப்பரது ஞானத்தின் நிலை நம்மால் அளவிடற்கு உரியதோ? இவற்றையெல்லாம் நினைந்தே சுந்தரமூர்த்தி நாயனார், தமது திருத்தொண்டத் தொகையில், வேறு யாரையும் கூறாமல், கண்ணப்பர் ஒருவரையே, 'கலைமலிந்த சீர்நம்பி' என்று அருளிச்செய்தார். இவற்றால் எல்லாம், 'பக்தி மார்க்கம்' என்பது ஞானத்திற்கு வேறானது-அன்று என்பது நன்குணரத் தக்கது.

பக்தி மார்க்கத்தின் வழியே செயல் நிகழும்பொழுது ஆங்காங்கு ஒவ்வொருவகையாக நிகழும். கண்ணப்பராயினும்

தாம் இனிது என்றுகண்ட ஊன் அமுதை இறைவனுக்கு ஊட்டினார். சாக்கியநாயனார், அன்பின் மிகுதியால் ஒருநாள் தாம்கண்ட சிவலிங்கத்தின்மேல் ஒரு கல்லை எடுத்து எறிந்தார். பின்பு அதுவே தமக்குத் தரப்பட்ட தொண்டு என்று கொண்டு நாள்தோறும் அதனையே செய்து முத்திபெற்றார். சாக்கிய நாயனார் எறிந்த கல்லை இறைவன் மலராகவே ஏற்றுக்கொண்டான் என்பதைச் சேக்கிழார்,

" அல்லாதார் கல்என்பார்; அரனார்க்குஅஃது அலராமால் "

என்று விளக்குகின்றார், இவைகளை எல்லாம் சாத்திரங்களை வைத்துக்கொண்டு, இது பொருந்துமோ பொருந்ாதோ என்று ஆராய்தல், தக்கதன்று,

தாயுமானவர் வடமொழி, தென்மொழி இரண்டையும் துறைபோகக் கற்றவர்தாம். அவருக்குக் குருவுபதேசத்தால் கிடைத்த மெய்ஞ்ஞானத்தின் பயனாக விளைந்த பேரன்பினால் சில கருத்துக்களை வெளியிடுகின்றார்; அது, விதி மார்க்கத்தைக் கடந்துநின்ற பக்தி மார்க்கமே. தாயுமானவர், விதிமார்க்கத்தில் நின்றவரே எனினும், அவரது பக்தியின்மிகுதி விதி மார்க்கத்தைக் கடந்து நிற்கும் கருத்துக்களைத் தோற்றுவிக்கின்றது. அவைகளை அவர் எடுத்துக்கூறிய பாடலே முதலில் தரப்பட்டது.

எண்ணில்லாத ஆகமங்களில் எல்லாம் இறைவன் விரும்பும் உண்மை என இயம்பப்படுவது பூசை ஒன்றே, ஆயினும், தாயுமானவர் இறைவனை நோக்கி, 'நான் உன்னை எந்த ஒரு வடிவத்திலும் வைத்துப் பூசைசெய்யமாட்டேன்' என்று கூறுகின்றார். பூசை செய்யாததற்குக் காரணம் யாது என்பதைப் பின்னர் விளக்கினார். அஃதாவது, 'உன்னை ஆவாகனம், தாபனம் முதலிய பாவனைகளால் வழிபடுகின்ற உருவத்தில் நீ இருப்பதுபோலவே, அத்திருவுருவத்திற்குச் சாத்த எடுக்கின்ற பூக்களிலும் நீ நிறைந்து நிற்கின்றாய்; ஆதலின்' அப்பூக்களும் எனக்குச் சிவலிங்கம் முதலிய திருவுருவங்களாகவே காட்சியளிக்கின்றன. அதனால் அப்பூக்களைப் பறிக்க எனக்கு மனம் வரவில்லை என்று கூறுகின்றார். இன்னும், 'வழிபடப் படும் திருவுருவங்களின் முன்நின்று நான் இருகைகளையும் குவித்துக் கும்பிடலாம்' என்றால், யாதொரு செயலையும் நீ

செய்விக்க நான் செய்வதன்றி, நானே தனியாக ஒன்றையும். செய்தல் இயலாது. ஆகவே, நான் கும்பிடுகின்ற கும்பிடும் அரைக் கும்பிடாகவே முடியும். அதனால், நான் கும்பிடுவது எதற்கு என்றும் கூறுகின்றார். இவைகளையெல்லாம் கேட்டு நாம் பூசை செய்வதையும், கும்பிடுவதையும் விட்டுவிடுவது என்பது பொருளன்று.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே."

என்ற திருமூலர் வாக்கின்படி, பார்க்கும் இடம் எங்கும் உலகமும், சிவமும் இருப்பினும் நமக்குச் சிவம் தெரியவில்லை; எங்கும் உலகமே தெரிகின்றது. ஞானிகளுக்கு உலகம் தெரியவில்லை; எங்கும் சிவமே தெரிகின்றது. உலகம் தோன்றாமல், எங்கும் சிவமே தோன்றிநிற்க அந்த நிலையில் தாயுமானவர், 'பார்க்கின்ற மலரூடும் நீயே இருப்பதால், அந்த மலரை எடுக்கவும் எனக்கு மனம் வரவில்லை' என்கின்றார். அவரது பக்திநிலை அம்முறையில் நினைக்கச் செய்கின்றது. சிவத்தையே காணாத நாம், எங்கேனும் சில விடத்திலாவது சிவத்தைக்கண்டு வழிபட வேண்டும் அன்றோ! அதனால், 'பண்ணேன் உனக்கான பூசை ஒருவடிவிலே' என்று நாம் எப்படிக் கூறமுடியும்!

எங்கும் சிவத்தையே காண்கின்ற தாயுமானவர், இப்பாடலில், "விண்ணே! விண் ஆதியாம் பூதமே! நாதமே! வேதமே! வேதாந்தமே' என்பன முதலாக எல்லாம் சிவமாய்க் காட்சியளிக்கின்ற தன்மையைக் கூறுவதைக் காண்கின்றோம். இவ்வாறு உள்ள பெருமான், '**கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுள்**' என்றும் குறிப்பிடுகின்றார்.

'கருணாகரக் கடவுள்' என்ற இத்தலைப்பில் அவர், 'நிர்க்குண, நிராமய, நிரஞ்சன, நிராலம்ப' என்றாற்போல ஒரு பாடல் முழுவதும் இறைவனது திருப்பெயர்களைப் பலபட எடுத்துக் கூறித் துதிக்கின்றார். குருவின் ஞானோபதேசத்தால் தத்துவங்கள் யாவும் மறைந்து, கண்ணீர் வெள்ளம் கரைபுரள்கின்றது என்கின்றார். 'எல்லாம் உன் அடிமையே; எல்லாம் உன் உடைமையே; எல்லாம் உன்னுடைய செயலே' என்னும்

உண்மையைக்கூறி எனக்குக் கதிகாட்டு என்று வேண்டுகின்றார். சிறு பெண்கள் பொய்வீடு கட்டிப் பொய்ச்சோறு சமைத்து அதை உண்டு மகிழ்வது போன்றது இவ்வுலக இன்பம்; என்னையும் இதிலே இருக்க வைத்துவிட்டால் நான் என்ன செய்வேன்! மார்க்கண்டேயர், சுகர் முதலிய முனிவர்கள் அடைந்த பேற்றை நான் அடைதல் கூடுமோ' என்றெல்லாம் ஏங்கிப் பாடுகின்றார். 'கன்மமாகிய துட்ட தேவதைக்கு மனமாகிய மறியைப் பலி கொடுத்துப் போக்கிவிட்டேன்; சாந்த தேவதையாகிய உன்னையே அன்பாகிய நீரையும், தற்போதமாகிய நிவேதனமும், பிராணனும், ஞானமுமாகிய தூப தீபங்களும் கொண்டு சதாகாலமும் வைத்துப் பூசிக்கின்றேன்' என்றெல்லாம் சொல்லி, மெய்யன்புபெற்ற பெரியோர்களது தன்மைகளை எல்லாம் இரண்டு பாடல்களில் விரிவாகக் கூறுகின்றார். இவரது ஞானத்தின் மிகுதிபோலவே பெருக்கெடுத்துப் பாய்கின்றது இவரது பக்தி வெள்ளமும். 'விதிமார்க்கம், பக்திமார்க்கம்' என்ற இரண்டில் ஒன்றிலும் செல்ல இயலாதவர்கள் இத்தகைய பக்தி வெள்ளப் பாடல்களைப் படிப்பினும் பயன் பெறுவார்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, **Tiruvaiyaru.**

Nearly after four years my wife and I were fortunate enough to have dharshan at this temple. The glory of Thanjavur Temples and the fine administration of Dharmapuram Adhinam could be found in this temple. We pray that we may be blessed with another opportunity to visit this temple in the near future,

(Sd.) P. S. Kailasam,
Judge, High Court,
Madras.

5—2—67

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 4, பக்கம் 211 இன் தொடர்ச்சி)

காரண கன்மமும் காரிய கன்மமும்

மாணுக்கன் : ஒவ்வோர் உயிரும் தான் அடைகின்ற இன்பத் துன்பங்களுக்கு அவைகள் முற்பிறப்பில் செய்த வினைதான் காரணம் என்பதை அடிகள் பலவாறு விளக்கியருளினீர்கள். ஆயினும், 'யாதேனும் ஒரு பிறப்பில் செய்யப்படுவதுதான் வினை' என்ருல், 'அங்ஙனம் செய்யப்படுவதற்கு முன் வினை உண்டோ, இல்லையோ' என்ற ஐயம் உண்டாகின்றது. ஏனெனில். செய்வதற்கு முன்னே வினை இல்லை எனின், 'முயற் கோடு, ஆகாயத் தாமரை முதலியனபோல, இல்லது எக்காலத் திலும் இல்லதே ; அதனுல், இல்லது தோன்ருது' என்று முதலிற் கூறிய சற்காரிய முறைப்படி, வினை என்பதே இல்லை என்று ஆகி விடும். இம் முரண்பாட்டிற்கு அஞ்சி. 'செய்வதற்கு முன்னும் வினை உண்டு' என்று கூறினுல், 'பல பிறப்புக்களிலும் செய்யப் படுவதுதான் வினை' என்றும், 'செய்யப்பட்ட வினை, செய்தவனைச் சென்று சாருமேயன்றிப் பிறரைச் சென்று சாராது' என்றும் மற்றும் இங்ஙனம் பலவாகச் சொல்லப்படும் இயல்புகள் எல்லாம் பொருந்தாதொழியும். ஆகவே, வினை என்பது எப்படி உண்டாகின்றது ?

ஆசிரியர் : இவ்வளவு தொலைவு வந்தபின்பு. முதலிலே சொல்லிய சற்காரிய வாதத்தை நினைவில் கொண்டு வினவு வதற்கு உன்னை மெச்சுகின்ருேம். அது நிற்க. சற்காரிய முறையில், 'தோற்றம், அழிவு' எப்படி நிகழ்கின்றன என்று சொல்ல வில்லையோ ?

மாணுக்கன் : நன்ருகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'தோற்றமும், அழிவும் உடைய பொருள்கள், முன் சூக்குமமாய் விளங்காது இருந்த காரண நிலையினின்றும் நீங்கித் தூலமாய் விளங்கி நிற்கும் நிலையே தோற்றம் ; பின் தூலமாய் விளங்கி

நின்ற காரிய நிலையினின்றும் நீங்கி முன்போலச் சூக்குமமாய் விளங்காது காரண நிலையை அடைவதே அழிவு' என்று இவ்வாறு விளக்கமாகவே சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆசிரியர் : நல்லது! அம்முறையேதான் இங்கும். இங்கு மட்டும் உனக்கு ஐயம் வருவானேன்?

மாணுக்கன் : சற்காரிய முறைப்படி தோன்றி அழிவன யாவும் காரியப்பொருள்; அவை காரணப் பொருளிலிருந்து தோன்றி, மீண்டும் காரணப் பொருளிலே ஒடுங்கிவிடுகின்றன என்பது முடிவு. இம்முறை கன்மம் அல்லது வினை என்பதற்குப் பொருந்துவதாய்த் தெரியவில்லை. ஏனெனில், பிற பொருள் களில் காரணமும், காரியமும் வேறுவேருய்த் தெரிகின்றன. உதாரணமாக, மண் காரணம்; குடம் காரியம். அதனுல் குடம், தான் தோன்றுவதற்கு முன்னும் மண்ணில் சூக்குமமாய் உள்ளது என்று கொள்கின்றோம். வினை அல்லது கன்மம் என்னும் காரியத்திற்கு, குடத்திற்கு மண் போல ஒரு காரணப் பொருள் சொல்லவில்லையே?

ஆசிரியர் : ஆம்! உண்மைதான்! 'குடம்' என்னும் காரியம் தூலப் பொருளாதலின், அதற்குக் காரணம் மண் என்பது எளிதில் உணரவும், உணர்த்தவும்படுகின்றது. வினை அவ்வாறின்றிச் சூக்குமப் பொருளாய் நிற்றலின், அதன் காரணம் இன்னது என அங்ஙனம் எளிதில் உணரப்படுதல் இல்லை. இல்லது தோன்ருது; உள்ளதே தோன்றும் ஆதலின், வினை, ஒருவனுல் செய்யப்படுதற்கு முன்னும் உள்ளதேயன்றி இல்லாதது அன்று. முன்பு இயற்கையாய் உள்ள வினையைத் தான், பின்பு ஒருவன் செயற்கையாகச் செய்கின்ருன். இயற்கை யாய் உள்ள வினை காரண கன்மமும், பின் ஒருவன் அதனைச் செயற்கையாகச் செய்யும் வினை காரிய கன்மமும் ஆகும். காரண கன்மத்தை 'மூலகன்மம்' என்று அடைமொழி கொடுத்துச் சில இடங்களில் இனிது விளங்கக் கூறுவர்.

மாணுக்கன் : மண்ணும், குடமுமாகிய காரண காரியப் பொருள்களில் காரணப் பொருளும், காரியப் பொருளும், முறையே, 'மண்' என்றும், 'குடம்' என்றும் வேறு வேறு பெயர்பெற்று நிற்றலின், அவை இரண்டும் காரணமும், காரிய மும் ஆதல் பொருந்தும்; கன்மத்தில், காரணம், காரியம் இரண்டும், 'கன்மம்' என்னும் ஒரு பெயரே பெற்று நிற்றலின், ஒன்றே காரணமும், காரியமும் ஆம் என்றல் எவ்வாறு பொருந்தும்?

ஆசிரியர் : தூலப் பொருளாகிய காட்சிப் பொருள் உள்ள வாறே, சூக்குமப் பொருளாகிய கருத்துப் பொருளும் இருத்தல் வேண்டும் என்று பிணங்குதல் அறிவுடைமையாகாது. மண்ணும், குடமும் தூலப் பொருள்களாதலின், அவை காரண நிலையிலும், காரிய நிலையிலும் பெரிதும் வேறுபட்டுத் தோன்று கின்றன; அதனால், அவற்றை வேறு வேறு பெயரால் குறிப்பிடு கின்றனர். வினை சூக்குமப் பொருளாதலின், அதன் காரண காரிய நிலைகளில் பெரிய வேற்றுமை இல்லை; அதனால், காரண நிலையைக் குறிக்க, 'மூல கன்மம்' என்று அடைமொழி கொடுத் துக் கூறி அமைகின்றனர்.

மாணாக்கன் : அடிகள் அருளுவது பொருத்தமே. ஆயினும், வினை உண்டு என்பது, மேல் அடிகள் பலவாறு விளக்கிய விளக்கத்தால் விளங்குகின்றது. அந்த வினை காரியமே என்ப தையும், அதற்குக் காரணமாக, 'மூலகன்மம்' என்பது ஒன்று உண்டு என்பதையும் அடியேன் தெளிந்துகொள்வது எப்படி?

ஆசிரியர் : 'காட்சியளவை மட்டும் பிரமாணம் அன்று; கருதலளவையும் பிரமாணம்' என்பது நீ அறிந்தது. தோன்றி நின்று அழிவன எவையாயினும், அவை காரியமே என்பதும் நீ உணர்ந்தது. 'வினையை ஒருவன் செய்யும் காலத்து அது தோன்றிப் பின், காலம் வருந்துணையும் காத்திருந்து, காலம் வந்த உடன் தன் பயனைத் தன்னைச் செய்தவனுக்குக் கொடுத்து, விட்டு ஒழிகின்றது' என்பது பலருக்கும் உடன்பாடு. எனவே தோற்றம், நிலை, இறுதி என்னும் மூன்றையும் உடைமையால் இங்குக் குறிப்பிடப்பட்ட இவ்வினை காரியமே என்பதும் காரியங்கள் யாவும் தமக்குக் காரணங்களை உடையன என்பது தெளிவாகலின், இக் காரிய கன்மமும் தனக்குக் காரணத்தை யுடையது என்பதும், அக் காரண கன்மமே மூலகன்மம் என் பதும் கருதலளவையால் இனிது உணர்ந்துகொள்ளலாம் அன்றோ!

மாணாக்கன் : ஆம்! அடிகள் சொல்வது, அளவை முறையில் பொருத்தமாகத்தான் தோன்றுகின்றது. அனுபவத்தில் அதனை உணர்வது எப்படி?

ஆசிரியர் : வினையாவது, பொருள்களின் புடை பெயர்ச்சி. அஃதாவது, பொருள்கள் ஓர் இடம்விட்டு, மற்றோர் இடத்தை அடைதல். இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால், 'பொருள் களின் அசைவு' என்று சொல்லலாம். இந்த அசைவு, அந்த அந்தப் பொருளிலும் அதனதனாலே இயற்றப்படுகின்றது

என்பது உண்மை. ஆயினும். அசையும் தன்மையை எந்தப் பொருளும் தானே தன்னிடத்தில் அமைத்துக்கொள்ளவில்லை; அஃது இயற்கையாய் அதனிடத்தில் முன்பே அமைந்துள்ளது என்பதும், அதனிடத்தில் இயற்கையாய் அமைந்துள்ள அசைவுத் தன்மை, காலம், இடம் முதலிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப அதனினின்றும் வெளிப்படுகின்றது என்பதும் தெளிவு. அவற்றுள், அசைவுத்தன்மை அல்லது புடைபெயருந்தன்மை போன்றது, காரண கன்மமாகிய மூலகன்மம் அசைவு அல்லது புடைபெயர்ச்சி போன்றது காரிய கன்மம்.

இன்னும், 'குயவன் குடத்தை வனைந்தான்' என்றால், குடத்தை வனைந்தவன் குயவன்தான்; ஆயினும், 'வனைதல்' என்ற தொழிலை அவன் அன்று உண்டாக்கவில்லை; அது. முன்பே உள்ளது. அப்படி ஒரு தொழில் முன்னே இல்லை என்றால், இப்பொழுது அவன் அதனைச் செய்தல் இயலாது. 'வனைதல்' என்ற தொழில் என்றும் இருப்பதால், அதனைக் குயவன் தனக்கு விருப்பமானபோது, விருப்பமான இடத்தில், விருப்பமான வகையில் செய்கின்றான். இப்படியேதான் மற்ற எல்லாத் தொழில்களின் நிகழ்ச்சிகளும் நிகழ்கின்றன. இது பற்றியே தொழிலை ஆராயுமிடத்தில் ஆசிரியர் தொல்காப்பியர், 'ஒருதொழில் நிகழ்ச்சிக்கு முதல் நிலையாக எட்டுப் பொருள்கள் வேண்டப்படும்' என்று கொண்டு அவற்றுள், 'வினை' என்பதையே முதலாவதாகக் கூறினார்.

"வினையே செய்வது, செயப்படு பொருளே,
நிலனே, காலம், கருவி என்றா,
இன்னதற்கு, இதுபயன் ஆக என்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆஎட் டென்ப தொழில்முத னிலையே"

என்பது அச்சூத்திரம். முதனிலை - காரணம். தொழில் முதனிலை - தொழிலுக்குக் காரணம். 'தொழிலுக்கு உள்ள காரணங்களுள் தொழிலும் (வினையும்) ஒன்று' என்று அவர் கூறியிருப்பதுதான், இங்கு நாம் குறிக்கொளத் தக்கது. 'தொழிலுக்குக் காரணம்' என்று சொல்வதிலிருந்து, 'தொழில் காரியம்' என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. காரணங்களைக் குறிப்பிடும் இடத்திலும், 'வினை' என்று ஒன்றைக் கூறுகின்றார். எனவே, அவர், 'காரண வினை, காரிய வினை' என, வினையை இரண்டாகக் கொள்கின்றார் எனபது மிகத் தெளிவு. இக்காரண கன்மத்தைத்தான், இங்கு நாம், 'மூல கன்மம்' என்கின்றோம். இது, சிவஞான மாபாடியத்திலும் எடுத்து விளக்கப்பட்டிருத்தல் காணலாம்.

வேளூர் தேவஸ்தானத்தில்

நவரத்னக்கவச அணிவிப்பு விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
அறநிலைத்துறை ஆணையர், துணை ஆணையர் முதலிய
அன்பர்களும்

வேளூர் தேவஸ்தானத்தில்

நவரத்னக்கவச அணிவிப்பு விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
மாயூரம் திரு. A. ரெத்தினம் செட்டியார் அவர்களுக்குப்
(A. R. C. & Sons.) பொன்னுடை போர்த்தி
"அணிகலப் பணிச்செல்வர்" என்ற பட்டம் வழங்குதல்

'வினைந்தான்' என்பதற்கு, 'வினைதல்' என்பதும், 'கொடுத்தான்' என்பதற்கு, 'கொடுத்தல்' என்பதும், மற்றும் அவ்வக் காரியத்திற்கு அவ்வம் முதனிலைகளுமே முதனிலை எனினும் பல்வேறு வகைப்பட்ட தொழில்களுக்கும் முதனிலையாய்ப் பொதுப்படநிற்கும் முதனிலை ஒன்று உண்டு; 'மூலகன்மம்' என்று நாம் சிறப்பாக இங்குக் குறிப்பிடுவது அதனையேயாகும். அது சிறப்பாக, 'இன்ன செயல்' என்று சொல்ல ஒண்ணாதபடி நிற்கும். அதனையே, 'புடைபெயருந் தன்மை, அசையுந் தன்மை' என்றெல்லாம் நாம் முன்னர்க் குறிப்பிட்டோம். அத் தன்மை, காலம், இடம், கருவி முதலியவற்றோடு கூடிச் சிறப்பு வகையில் நிகழும் பொழுதே, 'வினைந்தான், கொடுத்தான், நடந்தான்' என்றாற்போல, 'இஃது இன்ன செயல்' என்று சிறப்பு வகையில் குறிப்பிட்டுச் சொல்ல நிற்கும். எனவே, காரண கன்மமாகிய மூலகன்மம், பாகுபாடின்றி ஒன்றேயாய் நிற்கும். காரிய கன்மம், 'நல்லது, தீயது' என்று இருபெரும் பிரிவினதாய், ஒவ்வொன்றும் பற்பல வகையாய் விரிய, எண்ணிறந்தனவாய் நிற்கும். இவற்றுள், உயிர்களுக்கு இன்பமாயும், துன்பமாயும் வந்து எப்பொழுதும் பந்திப்பது காரிய கன்மமேயாதலின், அதுவே எங்கும் பெரும்பான்மையாக எடுத்துச் சொல்லப்படும். எனினும், மேற்காட்டிய தொல்காப்பியச் சூத்திரம்போல, சில இடங்களில், மூலகன்மம் உண்மையும் குறிக்கப்படும்.

"இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலின்வீழ் மாக்கள்"

என்னுமிடத்தில் சேக்கிழார், (திருநா - 129.) 'ஆன்மாக்கள், 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மூன்று கற்களில் 'நல்வினை, தீவினை' என்னும் இரண்டு கயிறுகளால் கட்டி, பிறவியாகிய ஏழு கடல்களில் தள்ளப்பட்டுள்ளன' என்று குறிப்பிடுகையில், மூலகன்மத்தைக் கல்லாகவும், அதன் காரியமாகிய புண்ணிய பாவங்களைக் கயிறாகவும் பிரித்து உருவகம் செய்திருத்தல் கூர்ந்து நோக்கற்பாலது. இதனால், "அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி" எனத் திருவாசகம் கூறுதல், காரிய கன்மத்தையே என்பது தெளிவாகும். இவைகளால், 'மூலகன்மம் ஒன்றேயாய் இருக்கும்' என்பதும், காரிய கன்மம் இருவகையாய் இருக்கும் என்பதும் இனிது விளங்கும். மூலகன்மம் என்றும் இருத்தலால், 'வினை அநாதி' என்றும், என்றும் இருப்பினும், உயிர்களின் செய்கையால் தோன்றி, நுகர்ச்சியால் அழிவதாய், 'வினை ஆதியந்தம் உடையது' என்றும் இருவகையாகவும் சொல்லப்படும். 'அநாதி' என்பது காரண நிலையை நோக்கியும்,

ஆதியந்தம் உடையது என்பது காரியநிலையை நோக்கியும் ஆதலால், அவை இரண்டும் தம்முள் முரணுவன அல்ல. "இருவினைப் பாசம்" என்னும் சேக்கிழார் திருப்பாடலை மாதவச் சிவஞான யோகிகள், மூலகன்மம் பற்றிய விளக்கத்திற்குச் சிவசமவாத உரை மறுப்பில் குறித்திருத்தல் காணத்தக்கது. இவற்றால் எல்லாம்,

ஒருவனால் செய்யப்படுவதே வினையாகலின், சற்காரிய முறைப்படி அதற்குத் தோற்றம் எப்படி என்று எழும் ஐயத்திற்கு, 'செய்யப்படுவது வினை' என்பது காரிய கன்மத்தையே என்றும், காரண கன்மமாகிய மூலகன்மம் என்றும் இருப்பதால், சற்காரிய முறைப்படி காரிய கன்மம் அதனின்றும் தோன்றும் என்றும் கூறிய விடைகளை அறிந்து தெளிவு பெறுவாயாக.

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரு. 3—00 வெளிநாடு ரு. 4—00

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

'அமுதிற்குத் தமிழென்று பேர்'

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 26, இதழ் 4, பக்கம் 223 இன் தொடர்ச்சி)

தமிழரின் அகஉணர்ச்சிகளை அழகாகப் பின்னிக்காட்டும் இலக்கியம் அகநானூறு. வையகத்து இன்புற்றோர் எய்தும் சிறப்பாம் அன்புற்றமர்ந்த வழக்கை விரிவுபடக் காட்டுவது தான் இந்த அருந்தமிழ்க் காப்பியம். பல்வேறு புலவர்களின் இக்கருத்துத் தொகுதியை மதுரை உப்பூரிகுடிக்கிழார் மகனார் உருத்திரசன்மர் தொகுத்தார்.

இவ்விலக்கியம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் நூற்றிருபது பாடல்கள் களிற்றியானைநிரை. அடுத்த நூற்றெண்பது பாடல்கள் மணிமிடை பவளம். கடைசியில் அமைந்துள்ள நூறு பாடல்கள் நித்திலக்கோவையாகும். இந்தப் பாடல்களின் திணையமைப்புங்கூட ஒரு வரிசைமுறையில் அமைந்துள்ளது.

" ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை ஓதாது
நின்றவற்றின் நான்கு நெறிமுல்லை - அன்றியே
ஆறும் மருதம் அணிநெய்தல் ஐயிரண்டு
கூறு தலைகுறிஞ்சிக் கூற்று ".

ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது - பாலைக்குரிய பாடல்களின் எண்கள். இரண்டும், எட்டும் - குறிஞ்சி, நான்கு - முல்லை. ஆறு - மருதம், பத்து - நெய்தல்.

சங்கத்துச் சான்றோர் கையாளும் உவமைகள் அற்புத மானவை. மிக எளிய உவமைகள் கூறி நம் உள்ளத்தில் பதியவைத்து விடுவார்கள்.

அகநானூற்றின் முதலாவது பாடல் ஆசிரியர் மாமூலனார் செய்தருளியது. தலைவன் தலைவியைப் பார்த்தறிந்தபோது

நின்னைப் பிரிதலும் ஒல்லுமோ என்ருன். இன்று தலைவிக்கு இக்கூற்று நினைவில் எழ

" சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் பிரியலம் "

என்றல்லவோ கூறினன் என்று தோழியிடம் அறிவிக்கிருள்.

வண்டுகள் நெருங்கும் கண்ணியையும், ஒள்ளிய கழலினையும் அணிந்த அஞ்சத்தக்க குதிரைப் படைகளை உடைய மழவரை வென்ருேட்டியவன் நெடுவேள் ஆவி என்பவன். அவன் முருகனை ஒத்த போர்வெற்றி கொண்டவன். அவனது பொதினிமலையில் என்னோடு நட்புக்கொண்ட தலைவர் இவ்வாறு சொன்ன சொல்லை மறக்கலாமோ? என்று பேசுகிருள். சிறியனாகிய சாணைக்கல் செய்வோன் அரக்கொடு சேர்த்தியற்றிய கல்லைப்போல பிரிதல் இல்லை. என்றல்லவோ கூறினர்? என்றும் வருந்துகிருள். மாமூலனர் முருகன்பால் கொண்ட ஈடற்ற அன்பே நெடுவேள் ஆவியை முருகனுக்கிணையானவன் என்று சொல்லத் தூண்டியது.

மதுரை நக்கீரனர் கபிலரைப்பற்றிய ஓர் அரிய செய்தியினைத் தம் பாடலில் தெரிவிக்கிருர். உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலர் தனது உயிர்த்தோழன் பாரியின் பறம்புமலை மூவேந்தர்களாலும் முற்றுகையிடப் பட்டிருந்தபோது, ஒரு அரிய பெரிய சூழ்ச்சியினைச் செய்தார். நெடுந்தொலைவிலிருந்த வயல்களிலிருந்த கதிர்களை எல்லாம் கிளிகளைப் பழக்கிக்கொண்டுவரச் செய்தார். கொணர்ந்த நெல்லை ஆம்பல் மலராகிய அவியலொடு மக்கள் உண்டனர்.

ஆண்டுகள் பல கழிந்தும் முற்றுகை தளரவில்லை. ஆயினும் முயற்சியால் மூவேந்தர்களையும் பிறக்கிடச்செய்த பாரி என்று பாராட்டியுள்ளார்.

" உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய் மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளமர் உழக்கி

ஏந்துகோட் டியானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி '' —78. அகம்.

ஆட்டனத்தி ஆதிமந்திகதை ஒரு அழகான இடத்தில் அமைந்து அணிசெய்கிறது. பரத்தை தன் தலைவனைக் கவர்ந்து கொண்டு விட்டாள் என்று பழி சுமத்துகிறுள் தலைவி. ஒரு பாபமும் அறியாத அவளுக்கோ கோபம் எழுகிறது. நம்மீது இவர்கள் சுமத்தும் பழிக்கேற்றுற்போல் - நாமும் ஒரு சூழ்ச்சிதான் செய்தால் என்ன என்ற எண்ணம் பிறக்கிறது. ஆதிமந்திதன் காதலனைக் கவர்ந்துகொண்ட காவிரிபோல நாமும் இவள் தலைவனை அகப்படுத்திக் கொள்வோம்.

" கச்சினன், கழலினன் தேந்தார் மார்பினன்
வகையமை பொலிந்த வனப்பமை தெரியல்
சுரியலம் பொருநனைக் காண்டீரோ என
ஆதிமந்தி பேதுற் றினைய
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகும்
அந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே '' -76. பரணர்.

பண்டைக்காலத் திருமண முறையை வெகு சுவைபடக் காட்டுகிறுர் நல்லாவூர்க் கிழார். (86)

அழகாக வேயப்பெற்ற பந்தலில் புதுமணலைப் பரப்பி - மனையை விளக்கம் செய்து மாலை, தோரணங்களைக் கட்டி வைப்பர். ஒரு புறத்தில் உழுந்தொடு தலைப்பெய்த பொங்கலை உண்டல் இடையருது நிகழும்.

தீயகோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற விண் மதியை உரோகிணி என்னும் விண்மீன் அடையவரும் நல்ல நேரத்தில் - விடியற்போதில் உச்சியிலே குடமும் கையிலே மண்டை என்னும் அகன்ற பாத்திரமும் வைத்திருக்கின்ற முதிய மங்கல மகளிர் சிலர் செய்யவேண்டிய செயல்களை வரிசை முறைப்படி செய்வார்கள். மக்களை ஈன்ற மனைக்கிழத்தியர் நால்வர் மணமக்களை வாழ்த்துவார்கள். கற்புநெறி வழுவாமல் பல பேறுகளையும் பெற்றுக் கணவனையும் விரும்பிப் பாதுகாப்பாயாக என்று நீரோடு பூக்களையும், நெல்லையும் தலையிலே தூவுவார்கள் அன்றே அப்பெண்ணைத் தலைவனுக்குரிமையாக்கி மகிழ்வார்கள்.

இயற்கைக் காட்சிகளை இறையுணர்வுடன் எண்ணும் இயல்பு நம்புலவர்களுக்கு உண்டு என்பதை இக்கட்டுரைத் தொடரில் முன்னேயும் சில இடங்களில் நாம் கண்டிருக்கிறோம்.

செவ்வானத்தில் பறக்கும் தூயநிறக் கொக்குகளின் வரிசை முருகனின் மார்பில் துவளும் மின்னலை ஒத்த ஆரம்போல் ஒளிர்கிறது என்கிறார்.

" நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கின் நிரை "

என்ற கற்பனை நக்கீரர் உள்ளத்தில் தோன்றியது என்றால வியப்புக்கு வேலையில்லை. மானின் கொம்பு இரும்பை முறுக்கி விட்டாற்போல இருக்கிறது என்பார் குறுங்குடி மருதனார். (4)

முதலையின் மேல்தோலைப்போன்ற அமைப்புக்கொண்ட கருங்கால் ஓமையை இளங்கீரனார் காட்டுகிறார். அந்தக் காலத்தில் பல்லி சொல்லைக் கேட்கும் பழக்கம் இருந்தது.

" ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள் " —கல்லாடனார்.

திணைமேயவரும் பன்றிகூட பல்லிசொல்லைக் கேட்டபிறகே புறப்படுகிறதாம்.

" ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி " (88)

இசைக்கு இசையும் அசுணம் என்ற பறவையைப் பிடிக்க மக்கள் கையாளும் வழியை விளக்குவார். நல்லிசையில் மயங்கி நிற்கும் அசுணத்தைப் பிடிக்க உடனே பறையொலியை முழக்குவர். பறைகேட்ட அசுணம் துடித்து விழும். அசுணம் இசையில் மயங்கும் காட்சியை ஈழத்துப் பூதன் தேவனார் காட்டுகிறார்.

" இரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுள்மலி பிழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரளை அசுணம் ஓர்க்கும் " (88)

யானையின் கவுளிடத்து ஒழுகும் மதநீரில் வண்டுகள் மொய்க்கின்றன. அவற்றின் ஓசை யாழ்ஓசை போலிருக்கவே உன்னிப் பாய்க் கேட்கிறது அசுணம்.

யானை ஒன்று தினை உண்ண வருகிறது. கொடிச்சி ஒருத்தி கானவனுக்காகப் பாடிக்கொண்டிருக்கும் பாட்டில் மயங்கி தினை உண்ணாமலும், திரும்பிச் செல்லாமலும் நின்றதாம்.

" ... ... கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன் "
(102 - சேந்தங்கூத்தன்)

அன்பும் - பண்பும் இணைந்த அகத்தமிழ் ஓவியம்தானே இது.

(விரியும்)

குமரகுருபரன் — தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

அப்பர் அருள் முரசு

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

(மலர் 26, இதழ் 4, பக்கம் 204 இன் தொடர்ச்சி)

காட்சி பெற

140. விறகுக்குள்ளே தீயும், பாலுக்குள்ளே நெய்யும் மறைந்து நிற்பதுபோல இறைவன் மறைந்து நிற்கின்றான்; அவன் ஒளிவடிவு உடைய பிரான்; உறவு என்ற கோல், நட்டு உணர்வு என்ற கயிற்றினால் இழுத்து முறுக வாங்கிக் கடைந்தால் அவன் வெளிப்படுவான். (1963)

இறப்பு எங்கே?

141. கற்றுக்கொள்ள வாயும் நாவும் உள்ளன; இட்டு வழிபடப் பூவும் நீரும் உள்ளன; இறைவன் இருக்கின்றான்; அவன் அருள்பெற நாமுளோம்; இறப்பு நம்மை என்ன செய்ய முடியும்? (1969)

கனி வேண்டுமா?

142. மனிதர்களே! இங்கே வாருங்கள்; ஒன்று சொல்லுவேன். பழம் ஒன்று தருவேன் - உண்ண ஆற்றல் உமக்கு உண்டா? இறைவன் என்பதே இனிக்கும் அக்கனி. வாடி வருந்தி அடையும் மக்களுக்கே அது பெரிதும் இனியது. (1970)

பகலவன் முன் பனி

143. சூரியனைக் கண்டதும் புல்லின் மேற்படிந்துள்ள பனிநீர்த் திவலைகள் மறைந்து விடும், அதுபோன்று பற்பல காலம் இறைவனை வழிபட்டால், பழைய வினைத் துன்பங்கள் மறைந்து விடும். (2048)

வாழ்வில் சமயம்

144. கங்கை, காவிரி குமரித்துறை முதலிய தீர்த்தங்களிற் படிவதனால் என்ன பயன்? வேதம் ஓதி, வேள்விகள் செய்து, நீதி நூல் பல கற்று, வேதாங்கங்களில் தேர்ந்து என்ன பயன்? காடுகளில் திரிந்து கடுந்தவம் புரிந்துதான் என்ன? புலாலுண்டலை யொழிந்து நின்றால் என்ன? கோடி தீர்த்தம் கலந்து குளித்து அவை ஆடினாலும் அரனுக்கன்பில்லையானால் புறச் சடங்குகள் எல்லாம் ஒரு பயனும் தரமாட்டா.

ஓடும் தண்ணீரை ஓட்டைக் குடத்திலே தேக்கிவைக்க முடியுமா? அப்படித்தான் இத்தகு செயல்களால் இறையருளைப் பெறமுடியாது. (பதி. 212)

அறியார் பேச்சு

145. கிணற்றில் உள்ள ஆமை கடலில் உள்ள ஆமையைப் பார்த்து, 'இந்தக் கிணறு அளவு பெரியதா உன்கடல்' என்று கேட்டதாம்; அதுபோன்றே,பாவமிக்கவர்கள் தம்மறியாமையால் தேவதேவனாக விளங்கும் சிவன் பெருந்தன்மையை அறியாது பிதற்றுகின்றார்கள். (2080)

பிறவாநாள்

146. உலகிற் பிறந்து பயன்பெற்ற நாள்கள், பயன் பெறாத நாள்கள் என்று இரண்டு வகைப்படுத்தினால், நம்மைப் படைத்துக் காக்கும் இறைவனைப்பற்றிப் பேசாத நாட்களெல்லாம் பிறந்து பயன்பெறாத நாட்களாகும். (பதி. 214)

ஒரேபொருள்

147. எல்லாச் சமயங்களிலும் கொள்ளப்படும் பரம்பொருள் ஒன்றே. (2235)

நினைத்தவண்ணமே

148. யார் ஒருவர் எந்த உருவத்துடன் உள்ளத்தில் எண்ணுகின்றார்களோ, அந்த உருவத்தோடு அவரவர் உள்ளத்தில் எழுந்தருள்வது இறைவனின் திருக்கருணை. (2274)

கருத்தறிவான்

159. பேசுகின்ற வாயிலும், பேசக்கருதுகின்ற மனத்திலும், அம்மனத்தின் கண் எழுகின்ற கருத்திலும் உள்ளவன் அவன்; அக்கருத்தைத் தானே யறிந்து நிறைவேற்றுபவனும் அவனே. (2321)

ஏரி நீர்

150. அவனுடைய திருவருட்செல்வம் எல்லையில்லாதது; ஏரியிலே நீர் நிறைந்தது போன்றது அது. (2521)

யோகம்

151. மூச்சுக்காற்றை அடக்கு; உற்றுநோக்கு; உள்ளமென்னும் துணியிலே திருவருளுருவத்தை யெழுது; 'உயிரை உனக்கே யுரிமை' என்று அவன் திருவடிகட்கே ஆட்படுத்து. (2331)

அருட்கண்

152. இறைவா! நின் அருளாகிய கண்ணால் நோக்காதவர்கள் அல்லாதவர்கள். (2337)

உயிர் இறை உணர்வு

153. அவள் முதலில் அவனுடைய பெயரைக் கேட்டாள். அதன்பிறகு அவன் இயல்புகளைக் கேட்டாள். பிறகு அவன் எழுந்தருளியுள்ள திருத்தலத்தைப்பற்றிக் கேட்டறிந்தாள்; அவன் மேலேயே பித்துக்கொண்டு விட்டாள். தந்தை, தாயர் உறவுகளை நீத்தாள்; உலக நிலைகளை அறவே மறந்துவிட்டாள்! தன்னையும் மறந்தாள்; தன் பெயரையும் இழந்தாள்; தலைவனாகிய அவன் திருவடிகளிலே இரண்டறக் கலந்துவிட்டாள். (2343)

நெஞ்சுக்கு நிலை

154. நெஞ்சே! நிலைபெற வேண்டுமா? இங்கே, வா; நாள்தோறும் எம் பெருமானுடைய கோயிலுக்குப் புலர்வதன் முன்செல்; கூட்டி மெழுகித் தூய்மைசெய்; மலர்களைக் கொய்து தொடுத்து அணிந்து வழிபடு; அவன் பெயர்களைக் கூறிப் பாடு; பாடி ஆடு அவ்வாறு செய்யும்செயலே உனக்குப் பெருநிலையை உண்டாக்கும். (2397)

ஆறுசமயங்கள்

155. பரம்பொருள் எல்லாப் பொருள்கட்கும் பொதுவாய் இருப்பது, வெவ்வேருக உள்ள ஆறு வகைச் சமயங்களும் அப் பரம்பொருளே. (2590)

உலகநிலை

156. எத்தாயர்? எத்தந்தை? எச்சுற்றத்தார்? எம்மாடு சும்மாடாம். எவர் நல்லார்? செத்துவிட்டால் வந்து உதவுவார் யாரும் இல்லை. சிறு விறகால் தீ மூட்டிச் சென்று விடுவார் எல்லோரும். இறைவ! அறிவு வடிவான பொருளே! உன் திருவடிகளை அடையப்பெற்ருல் துன்பம் வந்து என்னை என்ன செய்துவிட முடியும்? (2705)

பொறுக்கும் புனிதன்

157. தன்னை வழிபடும் அன்பர்கள் வடிக்கும் ஆநந்தக் கண்ணீர் அவனுக்கு இன்பம் தருவது; அடியார் செய்யுஞ் செயல்கள் உலகியலுக்கு மாருக (அநுசாரமாக)த் தோன்றினு லும், அவர்கள் மேற்கொண்ட பேரன்புடன் அவர்களைச் சிறிதும் வெறுக்காத பெருங்கருணை அவனுடையது. (2884)

விசும்பு ஆளலாம்

158. தந்தை யார்? தாய் யார்? உடன் பிறந்தவர், தாரம், பிள்ளைகள் யார் யார்? வந்தது எப்படி? போவது எவ்வாறு? எல்லாம் மாயம். இதற்குச் சிறிதும் மனம் மகிழவேண்டாம். உள்ளமே! எம் தந்தையார் திருப்பெயராகிய திருவைந்தெழுத்தைச் சிந்தித்திருப்பவர்க்கு வீட்டுலகு உறுதி. (3004)

இயக்கம் அவனே

159. இறைவ! நீ காட்டிஞல் நான் காண்பேன்; நீ ஆட்ட ஆடலாம்; நீ அடக்க அடங்கலாம்; நீ ஒட்ட ஒட்டலாம்; நீ உருக்க உருகலாம்; நீ பணிவிக்கப் பணியலாம், எல்லாம் நின் செயலே.

ஊரல்ல, காடே!

160. கோயில் இல்லாமல், திருநீறு அணிபவர் இல்லாமல் பத்தியாய் ஒருவரும் பாடாமல், சங்கு முதலியன ஒலித்து வழி பாடு செய்யாமல், பூவும் அரும்பும் இட்டு வழிபாடு புரியாமல் - ஓர் ஊர் இருக்குமாஞல், அது காடு என்றே கூறத்தக்கது ஆகும். (3019(

இரண்டாட்டம்

161. இறைவன் திருப்பெயரைச் சொல்லாதவர்கள். இறைவன் திருப்புகழைச் சொல்லாதவர்கள், ஒருபோதும் திருக்கோயிலை வலம் வாராதவர்கள், நோய்கள் கெடத் திருநீறு அணியாதவர்கள், ஏன் பிறந்தார்கள் எனில் - இறப்பதற்கும் பிறப்பதற்குமாக ஊசலாடவே பிறந்தார்கள். (3020)

நாம் வணங்கும் கடவுள்

162. பெருஞ்செல்வங்கள் தந்து, மண் உலகம் இரண்டையுமே கொடுத்து என்னைக்கவர நினைப்பவர் இருப்பார்களானால்' வீணே அழிந்து கெடும் அவர்களுடைய செல்வங்களை எத்துணையும் மதிப்பேன் அல்லேன். ஏனெனில் அவர்கள் இறைவன் திருவடிகளுக்கு அன்பற்றவர்கள்.

உறுப்புக்களெல்லாம் தொழுநோயால் அழுகிக் குறைந்தவர்களாய், பசுவை யுரித்துத் தின்னும் கீழ்மை உடையவர்களாய் உள்ளவர்களானாலும், இறைவனாகிய சிவபிரானுக்கு அன்புடையவர்களானால், அவர்களே நான் கடவுளென வணங்கி மதிக்கத் தக்கவர்கள். (3024)

இன்பமே எந்நாளும்

163. நாம் ஆர்க்கும் குடிஅல்லோம்; நமனையும் அஞ்சோம். உறுதியாக நரகத்தில் இடர்ப்படோம்; துன்பங்கள் எமக்கு என்றும் இல்லை. இன்பப்பேறு உடையோம்; பிணி முதலியவற்றால் தொடக்குறுதலும் எமக்கு இல்லை; எவர்க்கும் பணிய மாட்டோம். எம்மை யாண்ட இறைவனும் சிவபிரானின் திருவடிகளைச் சார்ந்ததனால் எமக்கு உண்டாகிய நிலை இது. (3047)

திருவடிதொழுவேன்

164. இறைவா! நான் என்ன சொல்லி எண்ணுவேன்? எம்பெருமானும் உன்னுடைய திருவடியையே எண்ணுவதல்லது வேறு எனக்கு எண்ணமும் இல்லை; கண்ணும் இல்லை; உற்ற பற்றுக்கோடும் இல்லை. அவற்றையே கைகளாற் தொழுது கண்டு போற்றுவேன். (3047)

(முற்றும்.)

திருத்தொண்டர் வரலாறு

வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 26, இதழ் 4, பக்கம் 227 இன் தொடர்ச்சி)

(4) இளையான்குடி மாற நாயனார்

'இளையான்றன் குடிமாற னடியார்க்கும் அடியேன்'
— திருத்தொண்டத் தொகை

" இயலா விடைச்சென்ற மாதவற் கின்னமு தாவிசைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடை மாறனெங் கற்பகமே"
— திருத்தொண்டர் திருவந்தாதி.

இளையான்குடி என்ற ஊரில் வேளாளர் மரபில் தோன்றிய மாறனார் என்னும் பெயர் கொண்ட இப்பெரியார் சிற்றம்பலவனின் திருவடிகளையே சிந்திக்கும் இயல்பினர். உழவுத்தொழிலால் பெருகிய செல்வம் உடையவர், அடியார்களிடத்துத் தளராத அன்பு கொண்டவர். சிவனடியார்களைக் கண்டால் அவர்களை அன்போடு வரவேற்று தம் வீட்டுக்கு அழைத்துவந்து அவர்கள் திருவடிகளை நீராட்டிப் பாதபூஜை செய்து ஆசனத்தில் அவர்களை இருத்தி அறுசுவை உணவு ஊட்டும் திருத்தொண்டை மேற்கொண்டவர்.

" கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆச னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய
அளித்துளார்."

இவ்வாறு மாறனார் எண்ணிறந்த அடியார்களுக்கு மாகேசுவரபூசை செய்து அவர்கள் கூறியருளிய வாழ்த்துரைகளின் பயனாகப் பெருகிய செல்வம் உடையவராய்க் குபேரனைப்போல விளங்கிவந்தார்.

வறுமையால் வாடுதல் :

செல்வம் உண்டான காலத்தில் மட்டுமல்லாமல் வறுமை அடைந்த காலத்திலும் இளையான்குடி மாறனார் அடியார்களுக்குத் தொண்டு புரியும் பண்புடையவர் என்பதைச் சிவபெருமான்

உலகிற்குணர்த்தும் பொருட்டு, மாறனாருடைய செல்வம் குறையுமாறு திருவுளங்கொண்டார். அன்றுமுதல் இவர் தம் வளமை நாளுக்குநாள் குறையத் தொடங்கியது. நாயனார் வறுமையில் உழல ஆரம்பித்தார். வீட்டிலுள்ள பொருள்களை விற்கும் நிலைமை ஏற்பட்டது ஏன்? தம்மையே விற்கும் அளவிற்குக் கடன்பட்டார். வளஞ்சுருங்கிய காலத்தும் நாயனார் மனஞ்சுருங்குதலின்றி அடியார்களுக்குத் தொண்டுபுரிவதை உறுதியாக மேற்கொண்டிருந்தார்.

சிவபெருமான் அடியவராய் வருதல் :

இளையான்குடிமாறனாரின் மன உறுதியை அறிந்த பெருமான் ஒரு நல்ல சிவனடியாரின் திருவேடங்கொண்டு மாறனாரின் வீட்டிற்கு எழுந்தருளினார். பெருமான் மாறனார் வீட்டிற்கு வருகை புரிந்த காலம் மழைக்காலம். இரவு நேரம். அன்று எவரும் உதவிசெய்யாததால் நாயனார் உண்ண உணவின்றிப் பசியோடிருந்தார். இரவு வெகுநேரம் ஆகிவிட்டபடியால் நாயனார் கதவைத் தாழிட்டுக்கொண்டு வீட்டிற்குள் சென்றார். அச்சமயத்தில் சிவனடியார் வேடங்கொண்ட விருந்தினர் வந்து கதவைத் தட்டினார். அவ்வோசைகேட்ட நாயனார் வந்து கதவைத் திறந்து அடியவரை உள்ளே அழைத்துச்சென்றார். மழையில் நனைந்த அடியவரின் உடலில் உள்ள ஈரம் போக்கித் தக்க இடத்தில் அமர்த்தினார். பசியோடு தோன்றிய அடியவருக்கு ஏற்ற உணவைப் படைக்க எண்ணினார். தம் மனைவியிடம் அடியாரை உண்பிக்கும் உணவுபெறும் வழி யாதென வினவினார்.

வயலில் தெளித்த விதைகளை அரித்து வருதல் :

மாறனாரின் மனைவியார் நாயனாரைப் பார்த்து அடியார்க்கு அமுது செய்விக்க உணவுப் பொருள் ஒன்றும் வீட்டில் இல்லை. கடன் கொடுப்பவரும் இல்லை. நேரமோ நள்ளிரவு; என்று கூறித் திகைத்துப் பின் தெளிந்து, நம் வயலில் இன்று நாம் விதைத்த செந்நெல் முளைகண்டிருக்கும்; அவற்றை ஒரு கூடையில் அரித்து வாரிக்கொண்டு வந்தால் உணவு படைக்கலாம் என்று கூறினார். மனைவியார் கூறிய அச்சொற்களைக் கேட்டதும் இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றவர்போல மாறனார் களிப்புற்றார். மழைபொழியும் அந்நள்ளிரவில் இறை கூடையைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு வயலுக்குப் புறப்பட்டார் நாயனார். பழகிய அவ்வழியைக் காலால் தடவிக்கொண்டே கடந்துசென்று வயலை அடைந்தார், மழைநீரில் மிதக்கின்ற அந்நெல் முளைகளைத்

தடவி எடுத்து இறை கூடையில் நிரைத்துக்கொண்டுவீட்டிற்கு விரைந்தார்.

திருவமுது சமைத்தல் :

மாறனாரின் மனைவியார் தம் கணவர் கொண்டுவந்த நெல் முளைகளை நன்றாகச் சேறு போம்படிக் கழுவினார். பின்னர் நாயனாரிடம் வந்து அடுப்பில் நெருப்பு மூட்டுவதற்கு விறகு இல்லையே என்று தெரிவித்தார். நாயனார் உடனே வீட்டில் கூரையோடு கட்டப்பெற்றிருந்த அலக்குகளில் சிலவற்றை அறுத்துத் தந்தார். அம்மையார் அவற்றை முரித்து அடுப்பில் தீ மூட்டி முளைகண்ட விதைகளை ஈரம் போக வறுத்துக் குற்றி அரிசியாக்கிச் சோறு சமைத்தார். மாறனார் கொல்லைப்புறத்து முளைத்திருந்த இளங்கீரைகளை பாசப் பழி முதலைப் பறிப்பவர் போலப் பறித்துக்கொண்டுவந்துகொடுக்க, அம்மையார் அதனை வாங்கிக் கழுவி ஆய்ந்து பலவகைக் கறிகளாகத் திறம்படச் சமைத்தார். தம் கணவரிடம் அடியவரை உணவுண்ண அழைத்து வரும்படி அனுப்பினார்.

சிவபிரான் அருட் காட்சி வழங்கியது :

மாறனார் உறங்குவதுபோல் அறிதுயில் கொண்டிருந்த அடியவர்பால் அணுகி 'பிறவிக் கடலில் அழுந்திய என்னை கரை யேற்ற வந்த பெரியாரே! திருவமுது செய்ய எழுந்தருள்க' என்று வேண்டினார். உடனே அடியவர்வேடந்தாங்கி வந்திருந்த பெருமான் சோதி வடிவமாக எழுந்து தோன்றினார். அதனைக் கண்ட மாறனாரும் அவர் மனைவியும் திகைத்து நின்றனர். சிவபெருமான் உமையம்மையோடு விடைமீது எழுந்தருளி அருட் காட்சி வழங்கினார். மாறனாரை நோக்கி, 'அன்பனே! அடியார்களை வணங்கி வழிபட்டுத் திருவமுது செய்வித்துவந்த நீயும் உன் மனைவியும் நம்பால் வருக! குபேரன் உங்கட்கு ஏவல் புரிவான்; பேரின்பத்தோடு என்றும் நீவிர் நம்மோடு உடனுறைந்து வாழ்க' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

"அன்பனே அன்பர்பூசை அளித்தநீ அணங்கினோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமர்ந் திருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கும்
மிக்கான்."

இவ்வாறு அருள் செய்து இறைவன் மறைந்தனன். இளையான்குடி மாற நாயனாரும் அவர் மனைவியாரும் பேரின்ப உலகை அடைந்து இன்புற்றனர்.

உ

சிவமயம்

தருமையாதீனம்

வேளூர் தேவஸ்தானம், வைத்தீஸ்வரன்கோயில்,

சீகாழி தாலூகா.

பிலவங்க ஆண்டு

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கிருத்திகா நட்சத்திர

அபிஷேக விபரம்

சித்திரை	27	15—5—67	புதன்கிழமை
வைகாசி	23	6—6—67	செவ்வாய்க்கிழமை
			(மண்டலாபிஷேக கிருத்திகை)
ஆனி	20	4—7—67	செவ்வாய்க்கிழமை
ஆடி	15	31—7—67	திங்கட்கிழமை
ஆவணி	11	27—8—67	ஞாயிற்றுக்கிழமை
புரட்டாசி	8	24—9—67	ஞாயிற்றுக்கிழமை
ஐப்பசி	4	21—10—67	சனிக்கிழமை
கார்த்திகை	1	17—11—67	வெள்ளிக்கிழமை
கார்த்திகை	29	15—12—67	வெள்ளிக்கிழமை
மார்கழி	27	11—1—68	வியாழக்கிழமை
தை	24	7—2—68	புதன்கிழமை
மாசி	22	5—3—68	செவ்வாய்கிழமை
பங்குனி	20	2—4—68	செவ்வாய்க்கிழமை

ஸ்ரீ வனதுர்கா மஹிமை

திரு. C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

(மலர் 26, இதழ் 4, பக்கம் 235 இன் தொடர்ச்சி)

வரருசி யென்னும் மகானுல் வகுக்கப்பட்ட கடபயாதி சங்கியை யென்று ஒரு கணக்கு இருக்கிறது. அதன்படி, எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட எண் விதிக்கப்பட்டுள்ளது. ஆனல் ஒற்றெழுத்துக்களைக் கணக்கில் சேர்த்துக் கொள்வதில்லை. அதுமட்டுமல்ல; இந்தக் கணக்கை இடது பக்கத்திலிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும். உதாரணமாக, வனம் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதில், 'ம்' என்பது ஒற்றெழுத்தாகையால், அதற்கு எண் கிடையாது. 'வ'வுக்கு எண் 4; 'ன'வுக்கு எண் 0, ஆகையால், வனம் என்ற சொல்லுக்குரிய எண் 40 ஆகிறது. ஆனல், கணக்கை இடது பக்கத்திலிருந்து தொடங்கவேண்டியதிருப்பதால், 40 என்னும் எண்ணை '04' என மாற்றி யெழுதிக்கொள்ள வேண்டும். அதாவது, முதலில் பூஜ்யம்; பிறகு 4 என்னும் எண், பூஜ்யம் என்றல், பூஜிக்கத் தகுந்தது என்று பொருள்.

பூஜிக்கத் தகுந்தது சிவம், அதனல்தான் பூஜ்யத்தை வடமொழியில் சிவலிங்கம்போன்ற வடிவத்தில் எழுதுகிறார்கள். இந்தப் பூஜ்யத்தோடு சேர்ந்த எண்தான் சக்தி.

வனம் என்றல் 04. அதாவது, பூஜ்யம் என்னும் சிவத்திலிருந்து நான்கு வகையான வாக்குச் சக்திகள் தோன்றின என்பது அதன் பொருள். பரா, பஷ்யந்தி, மத்யமா, வைகரீ என்பவையே அந்த வாக்குச் சக்திகள். இந்த நான்கு சக்திகளின் தொகுதியே சப்தப் பிரபஞ்சம் எனப்படுவது.

கடபயாதி சங்கிய்யப்படி. துர்கா என்னும் சொல்லுக்கு 38 என்ற எண் வருகிறது. இது 38 கலைகளைக் குறிக்கிறது. அதாவது, அக்னி கலைகள் 10, சூர்ய கலைகள் 12, சந்திர கலைகள் 16; ஆக மொத்தம் முப்பத்தெட்டு. இந்த சோமசூர்யாக்னிகள் மூன்றும் சேர்ந்துதான் அர்த்தப் பிரபஞ்சம், (ஜகத் என்னும்

சொல்லுக்கும் கடபயாதி சங்கியை ரீதியாக 38 என்ற எண்தான் வருகிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.)

எனவே, வனதுர்க்கா என்னும் நாமமானது, சப்தப் பிரபஞ்சம், அர்த்தப் பிரபஞ்சம் ஆகிய இரண்டின் தொகுதியையும் உணர்த்துவதாகும்.

கடபயாதிக் கணக்குப்படி 'வ'வுக்கு எண் 4, 'ன'வுக்கு 0 'து'வுக்கு 8, 'கா'வுக்கு 3, ஆக மொத்தம் 15 வருகிறது. 15 என்பது, பதினைந்து வர்ணங்களைக்கொண்ட ஸ்ரீவித்யா பஞ்சதசீ மகாமந்திரத்தைக் குறிக்கின்றது. ஸ்ரீ லலிதா சகஸ்ர நாமத்தில், "ஆத்ம வித்யா மகாவித்யா, ஸ்ரீவித்யா காமஸேவிதா" என்னும் நாமங்களுக்குப் பாஷியம் எழுதுகையில், ஸ்ரீ பாஸ்கரராயர் அவர்கள் "மகாவித்யா என்றால் வனதுர்கா" எனக் கூறி யுள்ளார்கள்.

வனம் என்பது காடு. வனதுர்கா என்றால், தன்பால் வந்து சரணடைந்தவர்களை சம்சாரமாகிய காட்டிலிருந்து காப்பாற்று பவள் என்பது பொருளாகும்.

துர்கா சப்தத்தில், 'து'வுக்கு எண் 8; 'கா'வுக்கு எண் 8 என்பது அஷ்டமூர்த்திகளைக் குறிக்கிறது.

ஆகாயம், வாயு, அக்னி, ஜலம், பூமி, சூர்யன், சந்திரன், யஜமானன் இவைதான் அஷ்ட மூர்த்திகள். இவற்றைப் புர்யஷ்டகம் என்றும் சொல்வார்கள்.

லக்ஷ்மீ, மேதா, தரா, புஷ்டி, கௌரீ, துஷ்டி, ப்ரபா, த்ருதி - இவை அஷ்ட சக்திகள். ஜீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மா, சுத்தாத்மா, ஞானாத்மா, ரூபாத்மா, மகாத்மா, பூதாத்மா - இவை எட்டு ஆத்மமூர்த்திகள்.

இம்மாதிரி எட்டு எட்டாக விளங்குபவற்றையெல்லாம் 'து' என்ற எழுத்து குறிக்கின்றது.

இதேபோல, முக்குணங்களையும், இச்சை, ஞானம், கிரியை யென்னும் மூன்று சக்திகளையும், மூன்று வேதங்களையும், மூன்று அக்னிகளையும், இம்மாதிரியே மும்மூன்றாக விளங்கும் எல்லா வற்றையும் 'கா' என்ற எழுத்துக் குறிக்கின்றது.

இந்த மகாவித்தைக்கு ஓர் உபநிஷத்து இருக்கிறது. அதில் அடிக்கடி, "அவப்ரஹ்ம த்விஷோ ஜஹி" என்ற வாக்கியம் வருகின்றது. "ப்ரஹ்ம ஞானத்தைக் காப்பாற்று. அந்த ஞானத்தை வளரவிடாமல் தடுக்கும் பகைவர்களாகிய காமக் குரோதாதிகளைக் கொல்வாயாக!" என்பது அந்த வாக்கியத்தின் பொருளாகும்.

ஸாரஸங்கிரஹம் என்னும் கிரந்தத்தில், ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்ற மூன்று வகையான தியானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. வனதுர்கா தேவிக்குரிய மூலமந்திரம் மிகவும் இரகசியமானது. அது குருமுகமாகவே கேட்டறியத்தக்கது. எனினும் அதன் அர்த்தத்தைக் கீழே தருகிறோம்.

"புருஷத்தன்மையுடையவளே, எழுந்திரு! ஏன் உறங்குகிறாய்? எனக்குப் பயம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. உன்னால் முடியுமானாலும் முடியாமற்போனாலும், அந்த என் பயத்தை சமனம் செய்வாயாக!"

பொதுவாக எல்லா மகாமந்திரங்களும் ஜீவப் பிரஹ்ம ஐக்யத்தைக் கூட்டி வைப்பவைதான். இந்த வனதுர்கா மந்திரமும் அத்தகையதே யென்பது, அதன் உட்பொருளைக் கூர்ந்து நோக்குவோர்க்குப் புலப்படலாகும்.

புருஷ தேவதைகளை தேவன் என்றும், ஸ்திரீ தேவதைகளை தேவீ என்றும் குறிப்பிடுவது மரபு. தேவ; தேவீ இந்த இரண்டுக்கும் எண்கள் 48 ஆகும், ஜீவ; என்றாலும் 48 தான். தேவ, தேவீ என்றால் ஸ்வயம்பிரகாசமாக விளங்குபவர்கள் எனப் பொருள்படும்.

தேவீ, ஜீவன் இவ்விரண்டு சப்தங்களும் 48 என்ற எண்ணோடு அமைந்திருப்பதன் பொருள், தேவியைத் தனக்கு அபேதமாக உபாசனை செய்யும் ஜீவன், தானும் தேவியாகவே ஆகிவிடுகிறான் என்பதேயாகும்.

எனவே, நாமும் அந்த முறைப்படி ஸ்ரீவனதுர்காதேவியை உபாஸனை செய்து, இந்த சப்த அர்த்தப் பிரபஞ்சங்களின் வாயிலாக அடையத்தக்க அறம், பொருள், இன்பங்கள் அனைத்தையும் பெற்று, முடிவில் அவளுடைய சாயுஜ்ய வடிவ முக்தியின்பத்தையும் எய்துவதற்கு, அவள் திருவருள் பாலிப்பாளாக!

நவசத்திகளின் வழிபாடு

சிவாகம வித்துவான்,
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 26, இதழ் 4 பக்கம் 239 இன் தொடர்ச்சி)

பஞ்சசத்தி :— இச்சை, ஞானி, கிரியை, ஈச்வரி, மனோன்மனி என்ற இவ்வைந்து சத்திகள் கார்ஹபத்தியம், ஆஹவனீயம், தக்ஷிணம், கேவலம், சிவம் என்ற ஐந்து அக்னியிலும் பூஜிக்கப்படும். ப்ரதிவீ மூர்த்தி முதலிய ஐந்து மூர்த்திகளின் சத்திகளாகும். பஞ்சாக்னிகுண்டபக்ஷ சிவயாகத்தில் இவர்கள் பூஜிக்கப்படுவார்கள்.

சப்தசத்தி :— ப்ராம்மி, மாகேச்வரி, கௌமாரி, வைஷ்ணவீ, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்ற ஏழு சத்திகள். இவர்கள் சப்த மாதா என்று வழிபடப்படுபவர்கள் இந்த சத்திகளின் துணைகொண்டுதான் ஸ்ரீ துர்க்காதேவி ரத்தபீஜன் முதலிய அரக்கர்களை சங்காரம் செய்தாள். பிராம்மி என்ற சத்தி பிரும்ம சாமுண்டி என்ற பெயர்கொண்டு பிரசித்தமாக விளங்கும் சத்தி, இவ்வாறே மாகேச்வரி முதலிய சத்திகளும், மகேச்வரன் முதலிய மூர்த்திகளின் ஒளியின் நின்றும் தோன்றிய வீரசத்திகள் ஆம்.

வச்யத்திற்கு ஸ்வயம்வரை, வதைக்கு வாராஹி என்று முதியோரின் முதுமொழி. வாராஹியை உபாசிப்பவர்களுக்கு சத்ருக்களின் உபாதிகள் கிடையாது. சுயம்வர பார்வதி என்ற தேவியை உபாசிப்பவர்கள் உலகத்தோரால் போற்றப் படுபவர்கள் ஆவார்கள்.

நவசத்தி :— வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரி, காளீ, கலவிகரணீ, பலவிகரணீ, பலப்ரமதனீ, சர்வபூததமனீ, மனோன்மனி என்ற பெயர் உடைய சத்திகள் நவசத்திகள் எனப்படுவர் இவர்கள்.

பராசத்தி என்ற ஆதிசத்தியே வாமாதி சத்திரூபையாய் பஞ்சகிருத்யஞ் செய்கிறாள். இதனுடைய விளக்கம் சித்தாந்த சாராவளியில் இவ்வாறு காணப்படுகிறது.

வாமம் : பிருதிவி தத்துவருபை ; சிருஷ்டியின் பிரவர்த்திக்குக் காரணம், பிருதிவீ மூர்த்திக்கு ஈச்வரன் பவர். அவர்தான் வாமதேவர். அவருடைய சக்தி வாமாசத்தி.

ஜ்யேஷ்டை : ஜலமயீ, ஜலமூர்தீசர், பவர், அவர் ஜ்யேஷ்டர் எனப்படுவர். அதன் சத்தி ஜ்யேஷ்டாசத்தி. ரௌத்ரீ, அக்னிமயீ, அதற்கு ஈசன் பசுபதி. அவர் உருத்திரன் அதன் சத்தி ரௌத்திரீ.

காளீ : ப்ராணன் காலரூபமானதால் காளீ வாயுமூர்த்தி. அதற்கீசன் ஈசானன். அவரே காலர் எனப்படுவர். அதன் சத்தி காளீ.

கலா என்பது அவயவம். விகரணீ சூன்யம். அவயவ சூன்யம் கலவிகரணீ. ஆகாசம் அவயவ சூன்யமாதலால் கலவிகரிணீ ஆகாசமூர்த்தி. அதற்கு ஈசன் பீமர். அவரே கலவிகரணர். அவரது சத்தி கலவிகரணீ. பலத்தை விசேஷமாகச் செய்வது பலவிகரணீ. சந்திரன் ஓஷதீசனானதால் பலவிகரணீ சந்திரமூர்த்தி. ஈசுவரன் மஹாதேவன். அவர் 'பலவிகரணர். அவரது சத்தி பலவிகரணீ.

பலத்தை யழிப்பது பலப்ரமதனீ. சூரியன் உக்ரகிரணனானதலால் பலப்ரமதனீ சூரியமூர்த்தி. அதற்கீசன் உக்ரன். அவர் பலப்ரமதனர். அவருடைய சத்தி பலப்ரமதனீ.

ஆன்மாவின் புண்ணிய பாபங்களை யடக்குவது சர்வபூத தமனீ. ஆன்மமூர்த்தி, அதற்கீசர். யஜமான், அவரது சத்தி பலப்ரமதனீ.

மனோன்மனீ : சிவமூர்த்தி. அது பக்குவர்களான பசுக்களை மலத்தைவிட்டு நீக்கி சிவத்தன்மையோடு சேர்க்கின்றமையால் மனோன்மனி எனப்படும். அதற்குள்ளிருப்பவர் பரமசிவன். உலக சிருஷ்டி முதலியவைகளுக்குக் காரண சத்திகளான இந்த வாமை முதலிய ஒன்பது சத்திகளும் பராசத்தியின் சுற்றிலும் வித்யேச்வரசத்தி என்ற பெயருடன் விளங்குகிறார்கள்.

நவதுர்க்கா : ஒருவகையால் :- சைலபுத்ரீ. ப்ரும்மசாரிணீ, சந்திரகண்டா, கூச்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயினீ, காளராத்திரீ, மஹாகௌரீ, சித்திதா என்றும், மற்றொருவகையால் :- அக்னிதுர்க்கை, மஹாதுர்க்கை, ஜலதுர்க்கை, பிரும்ம துர்க்கை, விஷ்ணுதுர்க்கை, ருத்ரதுர்க்கை, வனதுர்க்கை, ஸ்தூல துர்க்கை, சூலிநிதுர்க்கை எனவும் ஒன்பது பேதமுடையவர்களாகக் காக்ஷியளிக்கிறார்கள்.

'கலௌசண்டீ விநாயகௌ' கலியுகத்தில் எல்லோராலும் சுலபமாக உபாசித்து அவரவர் வேண்டிய விருப்பத்தை வேண் டியவுடன் அளிக்கும் தெய்வங்கள் துர்க்கையும், விநாயகரும் என்று முனிவரின் முதுமொழி.

"சதுர்வர்க்காய சண்டிகாம்" அதாவது நோயற்ற வாழ் வுடன் வாழவேண்டி, சூரியனை உபாசிக்கவேண்டும். தருமம், மோக்ஷம் இவ்விரண்டையும் பெற மாதவனை வழிபடவேண்டும். தருமம், அர்த்தம், மோக்ஷம் இம் மூன்றின் பொருட்டு சிவனை வழிபடவேண்டும். அறம், பொருள், இன்பம் வீடு என்ற இந் நான்கையும் பெற சண்டிகையை வழிபடவேண்டும். (பத்ம புராணம்)

அன்னை வழிபாட்டின் பயன் :—

"தண்ணளிக் கென்றுமுன்னே பலகோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்மதி வானவரானவர்தம்
விண்ணளிக்குஞ் செல்வமு மழியா முத்தி வீடுமன்றோ
பண்ணளிக்குஞ் சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே"

அம்மையின் அருளைப் பெற்றோர் இம்மை மறுமை வீடு என்ற மூன்றையும் எய்துவார்; இது துணிவு. மற்றும்,

"கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமிலாளை யெழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயிறன்னைத் தம்மால்
ஆமளவுந் தொழுவாரெழு பாருக்கு மாதிபரே"

செந்தாமரைப்போதகத்து வீற்றிருக்கும் கோமளவல்லியை, யாமளத்தின் கொழுந்து போல்பவளை, துன்பில்லாதாளை, எழு துதற்கரிய கருத்த திருமேனியை யுடைய எல்லாக் கலைகட்கும் உறைவிடமாகிய மயில் போன்றவளை இயன்றளவு தொழுபவர் கள் ஏழுலகிற்குந் தலைவர் ஆவார்கள்.

மண்ணுலகத்திலோ விண்ணுலகத்திலோ தேவியின் அருள் பெற்றவர்களால் அடைய முடியாதது ஒன்றுமில்லை என்று தேவீ பாகவதம் பறை சாற்றுகிறது. ஆகவே, ஒப்பில்லாத ஒன்பது பதியில் விளங்கும் கற்பகாம்பிகை முதல் காமாக்ஷி ஈருகவுள்ள ஒன்பது ஜோதிச் சுடரன்னை வழிபாட்டினால், அறிவு, சந்தானம், நோயின்மை, கல்வி, தனம், தான்யம், அழகு, புகழ், பெருமை, இளமை, வலிமை, துணிவு, வாழ்நாள், வெற்றி முதலியவை களைப் பெறுவார்கள் என்பது துணிவு.

ஓம் சத்தி!

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

காசி யாத்திரை

சி. அ.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் – வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்றபடி தீர்த்த யாத்திரையும், தல யாத்திரையும் சைவ சமயத்தின் இன்றியமையாத செயல்கள். தருமையாதீனம் 25 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தல யாத்திரை தீர்த்த யாத்திரைகளில் பெருவிருப்பம் உடையவர்கள். 'காசினி மருங்கு பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற்கு எளிதோ' என்று சிவபெருமானே அப்பருக்கு அருளிச்செய்த திருக்கயிலை யாத்திரையையே இவர்கள் உறுதியான திருவுள்ளத்துடன் மேற்கொண்டு திருக்கயிலாய தரிசனம் செய்து, தங்கள் ஆதீன மரபு திருக்கயிலாய பரம்பரை என்பதை நிதர்சனமாகக் காட்டியருளிக் கயிலைக் குருமணியாய் விளங்குபவர்கள். காசி யாத்திரையை இவர்கள் அவ்வப்பொழுது செய்து மகிழ்வார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் இப்பங்குனித் திங்களில் காசி யாத்திரை செய்யத் திருவுளங்கொண்டு, முதலில் இராமேசுவரத்திற்கு ஆதீனத் தொண்டர் பலருடன் எழுந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அடியேனைக் காசி யாத்திரை சென்று வரவேண்டும் என்று பலமுறை அறிவுறுத்தருளியது உண்டு. ஆயினும், தனிமையில் அதனை மேற்கொள்ள இயலாதிருந்த அடியேனுக்கும், உடன்வரவேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அருளாணை பிறந்தது. இராமேசுவரம், காசி இரண்டு யாத்திரையையும் செய்யும் பேறு ஒருங்கே கிடைக்கும் வண்ணம் அடியேனையும் ஆதீனத் தொண்டனாக்கி அருள் புரிந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது பெருங்கருணைக்கு அடியேன் எனது மனமொழிமெய்களாலாகிய பெருவணக்கத்தை என்றும் செலுத்தும் கடப்பாடுடையேன்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்கள் தொண்டர் பலருடன் பங்குனித் திங்கள் 5 ஆம் நாள் (19—3—1967) ஞாயிற்றுக் கிழமை மாலை இராமேசுவரத்திற்கு எழுந்தருளினார்கள். இராமேசுவரத்தில் உள்ள திருப்பனந்தாள் காசி மடத்தின் அலுவலர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பூரணகும்பம், திருமுறைப் பாராயணம் முதலிய வைபவங்களுடன் சிறப்பாக வரவேற்று' ஞாயிறு, திங்கள் இரண்டு நாட்களிலும் வேண்டுவன பலவற்றையும் செய்து, சிறப்பாக உபசரித்தார்கள்.

20—3—1967. திங்கட்கிழமை (சோமவாரம்) அதிகாலையில் ஸ்ரீலஸ்ரீ குருமணி யவர்கள் அக்கினி தீர்த்தந் தொடங்கிக் கோடி தீர்த்தம் வரை உள்ள 22 தீர்த்தங்களிலும் முறையாக ஸ்நானம் செய்தருளினார்கள். அடியார் குழாத்திற்கும் அந்த ஸ்நானங்கள் அனைத்தும் கிடைத்தன. அன்று காலை முதல் ஸ்ரீ இராமேசுவரர் ஆலயத்தில் அந்தணர் பதினொருவரது மகாந்நியாசம் ஸ்ரீ ருத்திர பாராயணங்களுடனும், சிவாசாரியர்களது கடஸ்தாபனம், கலச பூஜை, அக்கினிகாரியம் முதலிய எல்லாவற்றுடனும், ஸ்ரீ பர்வத வர்த்தனி யம்மை சமேத ஸ்ரீ இராமநாத சுவாமிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்கள் உடன் இருந்து செய்வித்த மகாபிஷேகக் காட்சியும், வஸோர்த்தாரா ஹோமமும் கண் பெற்ற தன் பயனாய் அமைந்து ஆனந்த வெள்ளத்தில் அனைவரையும் ஆழ்ந்திடச்செய்தன. ஓதுவார்களது திருமுறைப் பாராயணம் உள்ளத்தை உருக்கிற்று.

ஸ்ரீ இராமநாதசுவாமி தேவஸ்தான நிர்வாகி உயர்திரு. இராஜகோபாலன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களை ஆதீன சம்பிரதாயத்துடன், பாராட்டத் தக்க வகையில் உடன் இருந்து சிறப்பாக உபசரித்தார்கள்.

மறுநாட் காலையே ஆதீனத்திற்கு எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், பங்குனித் திங்கள் 14 ஆம் நாள் (28—3—1967) செவ்வாய்க்கிழமை காலையே காசி யாத்திரையைச் சென்னையிலிருந்து தொடங்கி அன்பர்களுடன் இடையறாது பிரயாணம் செய்து பங்குனித் திங்கள் 16 ஆம் நாள் (30—3—1967) வியாழக்கிழமை மாலை 4 மணி யளவில் காசிக்கு எழுந்தருளினார்கள். காசி மடத்து அதிபர் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தங்கள் குமாரசுவாமி மடத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்களை வரவேற்ற காட்சி சம்பந்தர் அப்பர் இருவரது சீர்காழிச் சந்திப்பை நினைவூட்டுவதாய் இருந்தது. இத் திருமடத்திலே எல்லா நாட்களிலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை அடியார் குழாத்துடன்

எல்லா வசதிகளோடும் உபசரித்த அரும்பெரும் செயல் என்றும், யாவராலும் மறக்க முடியாத ஒன்று.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்ற சமையத்திலும், மற்றும் எல்லாச் சமையங்களிலும் குமாரசுவாமி திருமடத்தில் யாவரும் கண்ணாரக் கண்டும், காதாரக் கேட்டும் களித்த காட்சிகள்,

" அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞர ணம்கொடுப்ப
அழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக் கரசரெனச்
சிறந்த சீர்த்தி
எம்பெருமக் களும் இயைந்தகூட்டத்தில் அடியார்கள்
இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருக்கும் ஒலிநிறைந்தா
உலக மெல்லாம் "

என்ற சேக்கிழார் திருவாக்கின் உண்மையேயாகும். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்கள் எங்கும் சிவ ஒலியே பரப்பிவருவது யாவரும் அறிந்தது. திருமுறைப் பாராயணம் முதலிய பலவற்றிற்கு அறக்கட்டளைகளும், ஊக்கப் பரிசுகளும் அமைத்து சைவ சமயத்தை எங்கும் தழைத்தோங்கச் செய்துவரும் காசி மடத்து அதிபர் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இத்தகைய அரும்பெரும் செயல்களைச் செய்து மகிழ்வது இயற்கையே

மறுநாள் (31—3—1967) வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் கேதார கட்டத்தில் கங்கையில் ஸ்நானம் செய்தருளினார்கள். அன்று காலை முதல் ஸ்ரீ கேதார கௌரி சமேத ஸ்ரீ கேதாரநாத சுவாமி சந்நிதியில் மஹாந்நியாச ஏகாதச ருத்ர பாராயணம், ஓதுவார்களது திருமுறைப் பாராயணத்துடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளும் ஏகாதச ருத்ராபிஷேக ஆராதனைகளைத் தாங்களே செய்தருளிய காட்சி அடியார்களது கண்ணேயும், கருத்தையும் கசிந்து உருகச் செய்தது. அன்று மாலை 5 மணி முதல் 8 மணி வரை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களுடன் படகுயாத்திரையில் கங்கையின் 64 ஸ்நான கட்டங்களுக்கும், ஞானசம்பந்தரது திருக்கொள்ளம்பூதூர்த் திருப்பதிகப் பாராயணத்துடன் எழுந்தருளித் திரும்பியகாட்சி ஞானசம்பந்தர் திருக்கொள்ளம்பூதூரில் ஓடம்விடுத்த அற்புதத்தை நேரே காண்பதுபோல இருந்தது.

2—4—1967 ஞாயிற்றுக்கிழமை பகல் பிரயாகையில் (அலகாபாத்தில்) ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்களது சுத்த கங்கா ஸ்நானத்துடன் தீர்த்தம் எடுத்துக்கொள்ளுதலும், பின்பு படகில் எழுந்தருளிக் கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் ஒன்றுகூடும் திரிவேணிசங்கமத்தின் நடுவில் பரிவாரங்களுடன் ஸ்நானம் செய்தருளுதலும் நடைபெற்றன. திரிவேணி சங்கமத்தைக் கண்டபொழுது,

> "தம்மேனி வெண்பொடியால் தண்ணளியால் ஆரூரர்
> செம்மேனி கங்கைத் திருநதியே — அம்மேனி
> மானே யமுனை அந்த வாணிநதி யும்குமரன்
> தானே குடைவேம் தனித்து"

என்று குமரகுருபரர் அருளிச் செய்துள்ள திருப்பாடலே அடியேனுடைய உள்ளத்தில் தோன்றி உளங்குளிரச் செய்தது.

3—4—1967 திங்கட்கிழமை (சோமவாரம்) காசி ஸ்ரீ விசுவநாதசுவாமிக்கு மகாபிஷேகம் மிகச் சிறப்பானவகையில் யாவரும் கண்டு களிக்கும் வகையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்களால் நிகழ்விக்கப்பெற்றது. அதுபோது அந்தணர்கள் அறுபத்தொருவர் மஹந்யாசமும், 1331 ஆவர்த்தி மஹாருத்ர பாராயணமும் செய்ய, சிவாசாரியர்களால், இராமேசுவரம் கோடி தீர்த்தம், பிரயாகை சுத்த கங்கா தீர்த்தம், காசிக் கங்கை முதலிய புனித தீர்த்தங்கள் நிரப்பப்பெற்ற 121 கலச பூசையும், வஸோர்த்தாரா ஹோமமும், ருத்ர திரிசதி அர்ச்சனையும் நிகழ்த்தப்பெற்றன. ஓதுவார்களது திருமுறைப் பாராயணம் மனத்தை உருக்கிற்று. ஸ்ரீ கேதாரநாதர் ஆலயத்திற்போலவே ஸ்ரீ விசுவநாதர் ஆலயத்திலும். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்களும், காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களும் ஸ்ரீ விசுவநாதசுவாமிக்கு மகாபிஷேகங்களைச் செய்தருளினார்கள். மகாபிஷேகமும், எங்கும், யாவரும் கண்டிராத வகையில் மிகப் பெரிய அளவில் நடைபெற்று, அனைவரையும் ஆனந்தத்திலும், வியப்பிலும் ஆழ்த்தியது. பலவகை அபிஷேகங்களில் 1008 சேர் பால் அபிஷேகத்தில் ஸ்ரீ விசுவலிங்கம் மூழ்கியிருந்த காட்சி, என்றும் யாருக்கும் கிடைத்திராத ஒரு பெருந்தரிசனமாகும். ஸ்ரீ விசுவநாதசுவாமி ஆலய மகந்துக்கள் நால்வரும் உடன் இருந்து எல்லாவற்றையும் சிறப்பித்தார்கள்.

யாத்திரைக்கு இடையிலும், ஸ்நானகாலங்களிலும், அபிஷேக ஆராதனை முதலிய வழிபாட்டுக் காலங்களிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள், அந்தணர்கள், சிவாசாரியர்கள், ஓதுவார்கள்,

ஆதீனத் தொண்டர்கள் முதலிய பலர்க்கும் பொன், பொருள், வஸ்திரம் முதலியவைகளைத் தங்கள் திருக்கை வழக்கமாக வாரி வழங்கிவரும் வள்ளன்மை, அன்பர்கள் உள்ளத்தில் என்றும் அகலாதிருக்கும் அரிய நிகழ்ச்சியாகும். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது யாத்திரைப் பெருநிகழ்ச்சியை நேரில் கண்டு களிக்கும் பேறு இம்முறை அடியேனுக்கு வாய்த்தமையை எண்ணி எண்ணி மகிழும் என் இதயக் களிப்பினால் இதனை இந்த அளவில் இதுபொழுது அடியேன் எழுதலானேன். இனி நிகழும் இனிய நிகழ்ச்சிகளை இயன்ற அளவில் பின்னர் எழுதுவேன்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

I visited the temple today. I am impressed very much the way in which the temple is neatly maintained. The archakas in the temple appear to be very much devoted to the deity. I am very happy that I had the opportunity of visiting the temple.

(Sd) N. Krishnaswamy Reddy,
4—3—1967. High Court Judge,
Madras.

Nearly after four years, my wife and I were fortunate enough to have dharshan at this temple. The glory of Thanjavur temples and the fine administration of Dharmapuram Adinam could be found in this temple. We pray that we may be blessed with another opportunity to visit this temple in the near future.

(Sd) P. S. Kailasam,
9—2—67. Judge, High Court, Madras.

வேலூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

டாக்டர். திரு K. இராமகிருஷ்ணன்

(மலர் 26, இதழ் 4, பக்கம் 217 இன் தொடர்ச்சி)

நீரிழிவு

போகர், புளிப்பாணி என்னும் சித்தர்கள் சீன தேசத்தவர் என்றும், அவர் தமிழகம் போந்து தமிழ் கற்று தமிழ் சித்தர்களாய் வாழ்ந்தார்கள் என்று சில ஆராய்ச்சி முடிவுகள் கிடைக்கின்றன. அக்கூற்று உண்மையாயின் சீனாவிற்கும் தென் தமிழ் நாட்டிற்கும் அறிவியல் தொடர்பு இருந்ததென்றும், இந்நாட்டிற்கிடையே கருத்துப் பரிமாறல்கள் இருந்தன என்றும் முடிவாகும். போகர் சித்தவைத்திய முறையால் தமிழ் நாடு அடைந்த பலன் அளவிடற்பாலதன்று, சித்தராய அவர் ஈட்டிய ஞானச்செல்வம் பனிமலைகடந்து ஆழ நெடும் புனல் கடந்து சீனம் சென்று அந்நாட்டிற்கும் நல்லது செய்தது என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லையல்லவா?

நீரிழிவு நோயினைப்பற்றிய எண்ணம், ஆராய்ச்சி முடிவுகள் தமிழக சித்தர்களுக்குத் தெளிவாக இருந்தன. நோயின் மூலத்தை அறிந்திருந்தனர் அதன் அறிகுறிகளை அறிந்திருந்தனர். அதன் வகைகளை இனங்கண்டு உணர்ந்திருந்தனர். அதன் விளைவுகளையெல்லாம் ஒருமுகப்படுத்தி எழுதிவைத்தனர். விரிப்பிற் பெருகுமாதலின் ஒரு சில கூறி முடிப்பேன். அகத்தியர் எனும் சித்தவைத்தியத் தந்தை கூறுவதைக் காண்க.

" தண்மையாய்ச் சலந்தானும் பசப்பு மஞ்சள்
தானிறங்கு மிசமுங் கோசமும் கடுக்கும்
ஆண்மையாய் அடிக்கடிக்கு நீர் இறங்கும்
அடிக்கடிக்கு அரை நாழி தனிலேகாணும்
வெண்மையாய் அடிதனிலே தான் பிடிக்கும்
மிக்கான சடம் வெளுத்து மேனி கன்றும்
பண்மையாய் பஞ்சு ஆண்டதனில் சொல்லும்
பகர்கின்ற மதுமியத்தின் பாங்குதானே." —8

இப்பாடலில் மதுமேகம் எனப்படும் நீரிழிவின் தன்மையும் அது உடலை வருத்தும் விதமும் மிகவும் வெளிப்படையாகக்கூறப் பட்டிருக்கிறது.

(பசப்பு - பச்சை நிறம், வீசும் - கோசம் Testicles and Penis) (சடம் - உடல்) முதுமியம் (Diabetes) நீரிழிவு நோயின் அறிகுறிகள்:- வாயில் தித்திப்பு, கால், கை மறத்தல், எரிவு, வாய் அண்ணம் (roof of the mouth) தாகம், சோம்பல், அசதி, உடல் முழுதும் தினவு, உறுப்புக்கள் மரத்து வலியுருத்தல் (Nouritis) உடலிலும், சிறு நீரிலும் எறும்பு வண்டு மொய்த்தல், நீர்த்த சிறுநீர், தூக்கமின்மை, ஒய்ச்சல் முதலிய பல அறிகுறிகளைக் கொண்டு இந்நோயை அனுமானிக்கலாம்.

நீரிழிவிற்குக் காரணமாக விளையும் ஏனைய நோய்கள் கணக்கிலடங்கா. விடாததாகம், தொல்லை தரும் இருமல், அடிக்கடி ஜுரம், வயிற்றுப்போக்கு, எரிவு, பலஹீனம், பக்கப்பிளவை (Carbuncle) ரத்தக்கட்டி, சீழ்க்கட்டி, அரோசகம், அஜீர்ணம் உடல் ஊன் அழுகுதல் (Gangrene) ஆருப்புண் முதலிய சில பழஞ்சுவடிகளில் காணப்பெறும், திருமூலர் திருவாக்கும் இங்கே கருதத்தகும்.

"இனிக்கின்ற வாதத்திடை சேரிலையந்தான்
பனிக்கின்ற கள்ளுப்பதவி போல் நீரோடும்
கனிக்கின்ற மேனி கரைந்து வெருப்பேறும்
தனிக்கு மது மேகந்தப்பா தேயையமே."

இதனால் சிறுநீரின் நீர்த்த தன்மையும் தொடங்கும் உடல் தன்மையும் கூறியவாறும்.

யூகிமுனி என்பார் நீரிழிவில் இருபது வகைகளை இனங் கண்டு அவற்றை வகைப்படுத்தி அவற்றின் குறைகுணங்களைத் தெளிவு படுத்தியிருக்கிறார். அவற்றில் செய்யுள் பல. ஒன்றினைக் கூறி அதன் பாங்கினைத் தெரிவித்தல் பொருந்தும்.

"எலியாகி லிங்கமெல்லாம் வருத்தமாகி
வண்டலாய்த் தேன்போல நீரிறங்கும்
எலியாகி எறும்பரிக்கும் சிறுநீர் தன்னில்
இறைச்சி போல் உள்ளுக்குள் இரணமாகும்
நலியாகி நாற்றமாம் உடம்பெங்குந்தான்
நாவிலே உணர்ச்சியில்லா துருகிப்போகும்
மலிவாகி நாவறண்டு மயக்கமாகும்
வருத்தமாம் மதுப்பிரமிய மார்க்கமாகும்."

(இலிங்கம் - Ponis, எலி - மது (Sweetness) உருசி - Taste).

மேற்கூறியவாற்ருல் நீரிழிவு, பற்றிய வரலாறும் ஆங்கில மருத்துவ முடிவுகளும், சித்தவைத்தியக் கூறுகளும் இன்ன இன்ன என்று கூறிப்போந்தோம். இனி சாதாரண மக்களும் நீரிழிவு நோய்க்கு உள்ளாயின் எளிதிற்கிட்டும் மருந்துகளைக் கொண்டு உபசாந்தியாக இந்நோயினைக் கூடியும் சில வழிகளைக் கூறுவோம்.

" பார்த்திடுமேகம் பகர் இருபத்தொன்றும்
போற்றிடும் அப்பிரகம் பொலிவான சிந்தூரம்
சேர்த்திடும் சீந்தில் செல்லாம் சருக்கரை
மாற்றிடு வெண்ணையில் மாமேகம் போகும். "

மேகநோய் இருபத்தொன்று. அந்நோய் அபிரகச் செந்தூரத்தில் சீந்தில் சருக்கரையையும், அன்று கடைந்தெடுத்த பசு வெண்ணையையும் சேர்த்து உண்டு வந்தால் நீங்கிப்போகும். அப்பிரகம் (Mica) எளிதில் சூர்ணமாகாது. அதனுலன்ரு போற்றிடு அப்பிரகம் பொலிவான சிந்தூரம் என்ருர்.

அப்பிரக பஸ்மத்தை உள்ளங்கையில் இட்டு தேய்த்து சூரிய ஒளியிற் காட்டினுல் அப்பிரகத்தின் மினுமினுப்பு இல்லா தொழியின் அது நல்ல தூய்மையான பஸ்பம்.

" பொடியா நோய் போக புகன்றிட்டார் என்நந்தி
மடிவான சூதம் மகத்தான தங்கம்
பிடிவான கெந்தி பேரான சத்து
குடியாய்ச் சிந்தாரித்துக் கட்டியே தின்றிடே "

நந்தி - சிவபெருமான், மடிவான சூதம் - ரசத்தின் தன்மை மாருது, ரூபத்தில் மாற்றி ரசமணிகட்டாக ஆக்குதல். பிடிவான கெந்தி – நெருப்பில் புகையக்கூடிய கந்தகத்தை புகையாமல் கட்டி அதினின்றும் எடுக்கக்கூடிய கந்தகச் சத்தையும் சேர்த்து வைத்திய சாஸ்திர முறைப்படி சிந்தூரம் செய்து நோய்களுக்கு தக்க அனுபானங்களில் கொடுக்க சகலநோய்களும் பொடியாகும் என்று ஸ்ரீ நந்தியெம்பெருமானுர் அருள்கின்ருர்.

இந் நன் மருந்தைத் :தின்றிட நரை, திரை, மூப்பு. அகலும் யாகாரியங்களும் சித்தியாகும். சித்தர்களுக்கும் சிறு காய கல்பம் என்றும் கூறுவர் திருமூலர்.

" தின்றிட நோயெல்லாம் திசைகெட்டே யோடிடும்
பன்றிட வாயுவும் பக்கத்திற் சேராது
தன்றிட மோகர்க்குத் தாளுகாது இம்முறை
தின்றிடச் சித்தரிக்கும் ஆவியாதிபோகவே "

" வியாதிகள் போக வெகுநாள் சடமுறப்
பயாதித்திரை நரை பாங்காய்த் தவிர்த்திடக்
கயாதிக்கவனங் கலந்தெங்குஞ் சுற்றிட
அயாதிய ஞானமும்சாரும் சித்தியே "

என்றும் கூறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட மருந்துகளைச் செய்து உட்கொண்டால் உடலை மாய்க்கக்கூடிய நோய்களும் அணுகாது. நரை, திரை, மூப்பு அகன்று அஷ்டமாசித்திகளும் கைகூடும். ஆனால் லோகார்த்தத்தில் ஈடுபட்டிருப்போர்க்கு இம்முறை ஆகாது. சித்தர்களுக்குச் சிறுகாய கல்பமாகும் என்று கூறுவர் திருமூலர். ஏனென்றால் சித்தர்கள் தன்னைத்தான் அறியும்வரை இச்சடம் அவசியமாக இருத்தலால் இவ்வுடலுக்கு ஊறுசெய்யும் நோய்கள் நீங்கவும். வெகுகாலம் தேகம் நிலைத்து நிற்கவும் அச்சத்தைக் கொடுக்கின்ற நரை. திரை நிவர்த்தியாகவும் ஆகாய மார்க்கத்தில் சஞ்சரிக்கவும் அழியாத பதிஞானம் அடைவதற்கும் இம்மருந்து பயன்படும் என்கின்றார்.

நீரிழிவிற்கு உபசாந்தி அளிக்கக்கூடிய பல பச்சிலை மூலிகைகளை உபயோகிக்கலாம். ஆயினும் அவைகள் அறவே நீரிழிவு நோய்களை நீக்கப் பயன்படா. நீரிழிவு நோயைக் கடினமாக்காமல் உபசாந்திக்காகவே பயன் படுத்தப்படலாம் ஆனால் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ஒருகால் நீரிழிவு நோய் அகலவாய்ப்புண்டு. அவற்றில் ஒரு சில ஈண்டு ஆராய்வோம

1. ஓட்டியிடித் தென்னும் பனைவெல்லத்தில்
   நாட்டிடு நீரிழிவு நலம்.
2. ஓரிதழ்த் தாமரை உண்ணப் பலனுண்டாம்
3. நீரிழிவு கல் மதமும் நிகழ் கொன்றைப் பட்டையா
   வாரந்தூள் காய்ச்சியே உண்.
4. நூருண்டு வன்னியிலை எருமைத் தயிரிலுண்
   பாரண்ட மதுமேகம் படும்.

எங்கள் வைத்திய சாலையில் கண்டறிந்த ஆராய்ச்சியில் நீரிழிவு நோய்க்கு மூலிகைகளானாலும் சரி, கடைச்சரக்குகளானாலும் சரி துவர்ப்பும், கசப்புமுடைய மருந்துகள்தான் குணப்படுத்துகின்றன என்பது புலனாகிறது. இதன் அடிப்படையில் சித்தர் முறைகளில் காணப்படுகின்ற பல அனுபவமுள்ள முறைகளையும் ஒன்று கலந்து அதனால் தயாரிக்கப்பட்ட மருந்துகளை நீரிழிவு நோயாளிகளுக்குக் கொடுத்துப் பார்த்ததில் பூரண குணம்

ஏற்பட்டிருக்கிறது. அவற்றுள் ஒரு நீரிழிவு நோய்வாய்ப்பட்டவர் கருத்தை வாசகர்களுக்கு அளிக்கிறேன்.

வைத்திய ஆராய்ச்சிக் குறிப்பு.

13—5—60-ல் விருத்தாசலத்தில் உள்ள ஸ்ரீ குமாரதேவர் மடத்தில் 25-ஆவது பட்டம் மகாசந்நிதானம் அவர்களுக்கு நீரிழிவு நோய்க்கு மருந்து கொடுக்கும்படி அழைத்திருந்தார்கள் நான் 22—9—60 லிருந்து அவர்களுக்கு மருந்துசெய்து கொடுத்தேன். அவருக்கு 5% நீரில் சர்க்கரையும், உடலில் அரிப்பும். சோர்வும், பலஹீனம், வயிற்றில் சொல்லமுடியாத ஒருவலி, இரவில் இருமல் முதலிய உபத்திரவங்கள் ஆரம்பத்தில் இருந்தது. மருந்து சாப்பிட்டு 20-வது நாள் 12—10—60ல் சுவாமிகள் எழுதிய கடிதந்தின் குறிப்பைக் கீழே குறிக்கின்றேன்.

ஸ்ரீ குமாரதேவர் மடம்.
விருத்தாசலம், 12—10—60.

ஸ்ரீமது பண்டாரத் , திருவுள்ளத்திலை அன்பிற்சிறந்த அருமையே குடிகொண்ட Dr. K, ராமகிருஷ்ணன் அவர்களுக்கு தீர்க்காயுசும் சிவஞானமும் சிந்தித்த மனோரத சித்தியும் மேன் மேலும் பெருக உண்டாவதாகவும் இவ்விடம் அடியார்கள் முதலான யாவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமங்களுக்கு பதில் எழுதவேணும்.

இப்பவும் இன்று சுவாமிகள் நீரைச் சோதனை செய்ததில் நீரில் சர்க்கரைச் சத்து அறவேயில்லை என்று தெரிகிறது. சுவாமிகள் நீரில் கலர் மாறிவிட்டதென்றும் உடம்பில் அசதி இல்லை என்றும் அரிப்பு முதலிய யாவும் அறவே நீங்கிவிட்டதென்றும் எழுதச்சொன்னார்கள். தற்போது சுவாமிகளுக்கு பூரண நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. புது உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கின்றார்கள். தாங்கள் அடுத்தவாரம் வந்துபோகும்படியும் எழுதச்சொன்னார்கள்.

உத்தரவுபடி,
(Sd.) K. சீதாராமையர்,
மானேஜர்.

தொடர்ந்து 3-10-61, 28-10-62, 5-11-63, 14-10-64, 24-12-65 முதலிய தேதிகளில் நீரைச் சோதனை செய்ததில் நீரில் சர்க்கரை அறவே இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இன்னும் ஆராய்ச்சி செய்து வருகின்றோம்.

சுபம்.

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

(மலர் 26, இதழ் 3, பக்கம் 157 இன் தொடர்ச்சி)

என்னெஞ் சறிகுவை நின்னெஞ் சுணர்ந்திட விச்சையுற்றே
சின்னஞ் சிறுவய தேமுதற் கொண்டியான் சிந்தையுன்பால்
மன்னப் புரிந்து மனமிரங் காயென்று வாய்த்திடுமோ!
வன்ன மடமுறும் வேளூர்த் தயிலம்மை யாமளையே. 69

(இ - ள்) வன்னம் மடம் உறும் வேளூர் யாமளை தயிலம்மை ஏ - பேரழகும் பேரிளமையும் மிக்க வேளூரில் கோயில்கொண்டு எழுந்தருளிய யாமளையாகிய தயிலம்மைத் தாயே! நின் நெஞ்சு உணர்ந்திட என் நெஞ்சு அறிகுவை - தேவரீருடைய மனமானது நன்கறிய அடியவன்றன் மனக் கருத்தினை நன்குக உணர்ந்தருளுவீர். யான் சின்னம் சிறு வயது ஏ முதல்கொண்டு உன்பால் சிந்தை மன்ன. புரிந்தும் - தமியேன் மிகவும் உணராத இளம் பிராயம் தொட்டு தேவரீருடைய (திருவடிக்கமலங்களில்) மனமானது நிலையுற்றிருக்க வைத்தும். மனம் இரங்காய் - திருவுளம் இரங்கினீர் இல்லை. என்று வாய்த்திடும் ஓ - எப்பொழுது கிட்டப்பெறுமோ திருவருள் (அறிந்தேனில்லை). விச்சை உற்றேன் – ஆசைப்பட்டுளேன் (எ – று).

(கு - ரை) விச்சை - ஆசை வன்னம் - அழகு. மன்ன - நிலைபெற. ஓகாரம் - வினாப்பொருட்டு. மடம் - இளமை. வாய்த்தல் - கிடைக்கப்பெறல். அறிகுவை - முன்னிலை வினைமுற்று.

ஆறு நதிமதி கொன்றை புயங்க மணிசடிலத்
தானார் வயித்திய நாதன் சினகரத் தார்ந்தவளே!
நாறு விடய மயலொழிந் துன்சர ணன்னுறவே
நாறு தரங்கொண் டினைந்தேன் றயிலம்மை நல்குகவே. 70

(இ - ள்) ஆறு நதி - என்றும் நீர்வளம் நீங்கப்பெறாத கங்கையினையும். மதி - பிறைச் சந்திரனையும். கொன்றை - கொன்றை மலரினையும். புயங்கம் - அரவினையும். அணி சடிலத்தான் - தரித்த செஞ்சடையான். ஆர் வயித்திய நாதன் - எங்கும் நிறைந்த வயித்தியநாதப் பெருமான்றன். சினகரத்து - திருக்கோயிலை. ஆர்ந்தவளே - திருவருள் கொண்டு நிறைந்து

விளங்குபவளே! (வைத்தியநாதன் சினகரம் வைத்தீச்சுவரன் கோயில்) நாறுவிடயம். மயம் ஒழிந்து - பலவகையான பொருளிடத்தும் வைத்துள்ள. மயக்கங்களெல்லாம் நீங்கப்பெற்று. உன் சரண் நண்ணுற ஏ - தேவரீருடைய திருவடிகளை யடையும் பொருட்டாகவே. நான் ஆதரம் கொண்டு இனைந்தேன் - அடியவன் பெருவிருப்பங்கொண்டு வருந்தியுள்ளேன் (ஆகையினால்). தயிலம்மை நல்குக ஏ - தயிலம்மைத்தாயே! கருணை பாலிப்பாயாக (எ - று.)

(கு - ரை) நாறுவிடயம் - பலவகைப் பொருள். ஆறாத - நீங்கப்பெறாத (குறையாத). சினகரம் - திருக்கோயில். புயங்கம் - பாம்பு. மயல் - மயக்கம். இனைதல் - துன்புறல். நண்ணல் அடைதல். ஏ - ஈற்றசை. ஆர்தல் - நிறைதல். கொன்றை - ஆகுபெயர்.

நஞ்சணி கண்டத்தன் வேளூர் வயித்திய நாதன்மகிழ்
செஞ்சொற் கிளிமொழி யேதைய னாயகத் தேவிநின்றாட்
கஞ்சமென் புன்முடி சூடிநின் பாலுறக் காமுற்றனன்
சஞ்சல நீக்கி நிறைவுற வேயெண்ணந் தாவருளே. 71

(இ - ள்) நஞ்சணி கண்டத்தன் - ஆலகால விடத்தினை யுண்டருளி யிருண்ட அழகிய மிடற்றினை யுடையவனாகிய, வேளூர் - புள்ளிருக்குவேளூர் என்னும் பதியில் கோயில் கொண்டருளிய. வைத்தியநாதன் - பிறவிப் பெரும் பிணிக்கு மருந்தளிக்கும் (பிறவாநெறி); மருத்துவப்பெருமான். மகிழ் செம்சொல் கிளிமொழி ஏ - இடப்பாகத்தில் இருத்திக் களிக்கின்ற இனிய மொழி யுரைக்கும் கிளிமொழிப்போல. கொஞ்சிப் பேசுகின்ற பெருமாட்டியே. தையல் நாயகம் தேவி - பாலாம்பிகையாகிய தெய்வமே! நின் தாள்கள் - தேவரீருடைய திருவடித் தாமரைகளை. என் புன் முடிசூடி - அடியவன்றன் அற்பமான சிரசின்மேற்றுங்கி. நின்பால் உற காமுற்றனன் - தேவரீரிடத்தில் பற்றுக்கோடாக அடைய பெருவிருப்புற்றுளேன். சஞ்சலம் நீக்கி - மனவேதனையைப் போக்கி. எண்ணம் நிறைவுற ஏ அருள்தா - ஏழையேனுடைய எண்ணம் பூர்த்தியாகுமாறு கருணைதந்து ஆண்டருள்க (எ - று).

(கு - ரை) கஞ்சம் - தாமரை. காமுறல் - பெருவிருப்பங்கொளல். தா - தருவாய். சஞ்சலம் - கவலை (வேதனை). ஏகாரம் - தேற்றம். பிறிது ஏகாரம் ஈற்றசை.

(தொடரும்)

வேலூர் தேவஸ்தானத்தில்

நவரத்னக்கவச அணிவிப்பு விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
சென்னை மாநில அறநிலைய ஆணையர்
திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்களுக்குப்
பொன்னாடை போர்த்துதல்

செய்திகள்

வேளூரில் நவரத்ன கவசம் அணிவிப்பு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குப் புதியனவாகச் செய்யப்பெற்ற நவரத்தின கவசங்கள் அணிவிப்பு விழா 16—3—67 வியாழக்கிழமை கிருத்திகையன்று நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் திருவுளப்படி, பக்தர்கள் பொதுமக்கள் காணிக்கையால் சுமார் மூன்று லக்ஷ ரூபாய் மதிப்பில் கவசங்கள் செய்விக்கப்பெற்றன. கவச அணிவிப்பு விழா. சென்னைமாநில இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திருவாளர். மா. சே சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்கள் முன்னிலையில் நிகழ்ந்தது. தஞ்சைத் துணை ஆணையர் திருவாளர் A. மார்க்கண்டவேல்ராசன் அவர்களும் கலந்துகொண்டார்கள்

அவ்வமயம் நவரத்தின கவசத்தை சிறந்த வேலைப்பாட்டுடன் செய்துகொடுத்த மாயூரம் A. R. C. அணிகலக் கடை உரிமையாளர் திரு. சுந்தரம் செட்டியார் அவர்களுக்கு "அணிகலப் பணிச் செல்வர்" என்னும் சிறப்புப் பட்டத்தை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் வழங்கி, பொன்னுடைபோர்த்தி ஆசி வழங்கியருளினார்கள்.

திருபுவனத்தில் பங்குனி உத்திரத் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் திருநாள் 16—3—67 வியாழக்கிழமை முதல் தொடங்கி 25—3—67 சனிக்கிழமை முடிய மிகச் சிறப்பாக நடைபெற்றது. 20—3—67 திங்கட்கிழமை தன்னைத்தான் அருச்சித்தல் திருநாள். அன்று பெருமான் இடபவாகனத்தில் காட்சியளித்தலும், 22—3—67 புதன்கிழமை திருக்கல்யாண மகோற்சவமும், 24—3—67 வெள்ளிக்கிழமை அன்று திருத்தேர்த் திருவிழாவும் நடைபெற்றன. அன்பர்கள் வந்து வழிபட்டு உய்ந்தனர். விழா நாட்களில் நாதஸ்வர இன்னிசை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன.

எதிர்காலம் -திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கஹு சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய)

(14—4—67 முதல் 14—5—67 முடிய)

பராபவஹு பங்குனிமீ 30உ குருவாரம் ரோகிணி நக்ஷத்திரத்தில் உதயாதி நாழிகை 50 விநாடி 43க்கு மகர லக்னத்தில் ஸ்ரீ சூரியபகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு பிரவேசம் ஆகிறார்.

பிலவங்கஹு சித்திரைமீ முதல் தேதி சுக்கிரவாரம் மேஷ சங்கிரமண சித்திரை வருஷப்பிறப்பு புண்ணியகாலம். வருஷப் பிறப்பு பண்டிகை. ஷை பிலவங்க வருஷத்திற்கு சந்திரன் ராஜாவாகவும் சஸ்யாதிபதியாகவும் இரண்டு ஆதிபத்தியங்களும் சந்திரனுக்குக் கிடைத்து இருப்பதாலும் சுக்கிரன் மந்திரியாகவும் சனி தான்யாதிபதியாகவும் அமைந்தபடியாலும் பருவக்காலங்களில் மழைபெய்யவேண்டிய இடங்களில் மழைபெய்தும் சஸ்ய தான்யங்களும் விருத்தியாகி வருஷம் முற்பாதிக்குள் கருப்பு தான்யங்களும் இதர புஞ்சை தான்யங்களும் சமிர்த்தியாய் விளைந்து விலைவாசிகள் எல்லாம் கொஞ்சம் குறைந்து பிரஜைகள் மன நிம்மதியுடனும் சாந்தியுடனும் சுகவாழ்வு வாழ்வார்கள். தெய்வீகத் தோற்றம் எங்கும் பிரகாசிக்கும். சாதுக்களும் சஜ்ஜனங்களும் காப்பாற்றப்படுவார்கள். சுபம் உண்டாகும்.

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தையேதரும். ஜீவனம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். அடிக்கடி சஞ்சார பலனையும் தரும். நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். நூதனமாகத் தொழில் ஆரம்பமாகும். தெய்வ பலம் உண்டாகும். திங்கள், புதன் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

விருஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். தொழில் மாறுதல்களும் சிற்சில விரோதங்களும் உண்டுபண்ணும். காரியங்கள் விக்னமடையும். மாசாந்திரத்தில் சகல காரியங்களும் சுபமாகும். நினைத்தகாரியம் கைகூடும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தனதான்ய விருத்தியும் தொழில் விருத்தியும் பெரியோர்களின் சிநேகமும் ராஜாங்கமைத்ரமும் தன்னால் நண்பர்களுக்கு உபகாரத்தையும் உண்டுபண்ணும் தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் கிடைக்கும். சனி, புதன் சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வியவகாரங்கள் ஜெயிக்கும். தொழில் ஓங்கும் ஸ்தாவர ஜெங்கம சொத்துக்களில் கிரய விக்கிரயங்கள் ஏற்படும். சுபசோபனாதிகள் முதலிய மங்கள காரியங்களும் உண்டுபண்ணும். சத்ருபராஜயம் ஏற்பட்டு சந்தோஷம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி மகம் நான்கு பாதங்களும் பூரம் முதல் பாதமும் சுபத்தைத்தரும். ஜீவன விருத்தி ஏற்படும். குடும்பசுகம் உண்டாகும். பெரியோர்களின் அன்பினால் சகல காரியமும் சித்தியாகும். மற்ற பூரம் 2, 3, 4 பாதங்களும் உத்திரம் முதல் பாதமும் ரொம்பவும் சிரமமான பலனையே தரும். அடிக்கடி இடம் மாறுதலும் தொழில் மாறுதலும் வீண் நஷ்டங்களும் மேலோர்களின் விரோதமும் உண்டுபண்ணும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் தெய்வீகத் தோற்றத்தோடு பிரகாசிக்கச்செய்யும். நூதனமான அநேக காரியங்களை உண்டு

பண்ணி உலக பிரசித்தியைத்தரும். தொழில் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பும் சகல காரியசித்தியும் ஏற்படும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சுபம் இருக்காது. நஷ்டங்களைத் தரும். இடம் மாறும்படி செய்யும். மனக்கிலேசம் உண்டாகும். மற்ற சுவாதி நான்கு பாதங்களும் விசாகம் 1, 2, 3 பாதங்களும் இறைவன் அருள் ஏற்பட்டு சகல காரியமும் சித்தியாகும். தொழில் விருத்தி ஏற்படும். யக்ஞயாகாதி பலன்களும் பிரதிஷ்டா பலன்களும் கிடைக்கச்செய்யும். கடன் நிவர்த்தியாகும். பெரியோர்களின் அன்பினால் சகலகாரியமும் சித்தியாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ரோக பீடையினால் வைத்தியச் செலவு அதிகமாகும். தொழிலில் கொஞ்சம் நஷ்டம் காட்டும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். நம்பினவர்கள் மோசம் செய்வார்கள். மாசாந்தரத்தில் தெய்வ பலத்தால் சகலமும் சுபமாகி நிம்மதி அடையும். வியாழன் வெள்ளி சுகமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனூர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். நூதனமாகத் தொழில் விருத்தியும் குடும்பத்தில் மங்கள காரியங்களும் நஷ்ட தன பிராப்தியும் வியாபார விருத்தியும் நண்பர்களால் அசாத்யமான காரியங்கள் எல்லாம் சுலபகரமாக சாதித்தலும் தெய்வீகத் தன்மையும் ஏற்படச்செய்யும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். ராஜாங்கத்தால் நன்மதிப்புப்பத்திரம் கிடைக்கும். மேல் பதவிகளும் தனதான்ய விருத்தியும் நூதனமாக ஸ்தாவர ஜங்கம

சொத்துக்கள் சேருதலும் காரியசித்தியும் ஏற்படச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½ சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனையே தரும். விரோதம் உண்டுபண்ணும். அதிகமாக நஷ்டம் உண்டுபண்ணும். வீண் அலைச்சல்களும் அபவாதங்களும் ஒற்றுமைக்குறைவும் உண்டு பண்ணும் வரவுக்கு மிஞ்சின செலவும் ஆரோக்யக்குறைவும் கொடுக்கும். மாசாந்தத்தில் தெய்வபலத்தால் எல்லாம் சுப மாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனையேதான் தரும். செல வினங்களோடு சந்தோஷத்தை உண்டுபண்ணும். உத்தியோக உயர்வும் தொழில் ஏற்றமும் ஏற்படும். மத்தியில் ஆரோக்யக் குறைவு காட்டும் மனம் சதா சஞ்சலமாகவே இருந்துகொண்டு இருக்கும். புத்திராதிகளாலும் மேலோர்களாலும் நன்மை உண்டாகச்செய்யும். இடம் மாறலும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் கிரய விக்ரயங்களும் ஏற்படும். மாசாந்தத்தில் லாபத்தைத்தரும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு :- ஷைமாதம் உலக ஜாதக ரீதியாக உலகில் மகா ஜனங்களுக்கு சந்தோஷக்குறைவு, சுகக்குறைவு, பலவிதமான சதிபாதைகள் எல்லாம் உண்டாகி பிரஜைகள் வாழ்க்கை நடத்துவதற்கே சிரமப்படுவார்கள். ஆதலால் மேலோர்களும் பெரியோர்களும் உலக க்ஷேமத்தின்பொருட்டு, வருஷ ஆரம் பத்தில் ருத்திரமகாயக்ஞமும் லக்ஷ கோடி அர்ச்சனைகளும் செய்து உலகத்தை ரக்ஷிக்க முன்வரவேண்டும். சர்வேச்வரன் உலகத்தை ரக்ஷிப்பாராக. சுபம் உண்டாகும்.